உ



# வாழ்க்கை என்றால் என்ன?

ஆக்கம்:-

செ. பிரதீபன்

JPL
C8238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஊட்டுக்குழி நாச்சிமார் கோவிலடி,
நவாலி வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த
எங்கள் அன்புச் செல்வம்
( மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்,
தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவனும்)

## அமரர்

# செல்வரத்தினம் பிரதீபன்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த


# தீப மலர்



823800
பொது சன நூலகம் யாழ்ப்பாணம் விசேட சேகரிப்பு பகுதி
KOHA JPL
191021 cc
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
191021

உ

சிவமயம்



எமது அன்புச் செல்வத்தின்

திருப்பாதங்களுக்கு இந் நூல்

# சமர்ப்பணம்

அன்பு என்னும் மூன்றெழுத்தில்

அறிவு மொழி கூறிய

எம் பாசச் செல்வமே!

ஒன்றுகூடிப் பாசமொரு

வார்த்தை தேடி, தேடிய மொழிதனை

மலராக்கிய எம் குலவிளக்கின்

பாதக்கமலங்களில் காணிக்கையாக

இம்மலரினைச் சமர்ப்பித்து

வணங்குகின்றோம்

குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

தோற்றம்
29.05.1985

மறைவு
25.05.2007



# அமரர் செல்வரத்தினம் பிரதீபன்

( மானிப்பாய் இந்துக்கல்லூரி பழைய மாணவனும்
தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரிய மாணவனும் )

' கல்லூரி எனும் மரத்தில் ஆசிரியராக பூமலரும் காலமிது
ஆனால் இன்று அந்த மலர் மரத்தை விட்டு
விழுந்ததன் மாயமென்ன? '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1 DEC 2007



# வாழ்க்கை என்றால் என்ன?

8238 CC

ஆக்கம்:-

செ. பிரதீபன் (அமரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரதும் வாழ்க்கைத் தகமை விருத்தி செய்வதற்காக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

"வாழ்க்கை என்றால் என்ன?" என்ற தலைப்பைக் கொண்டு வாழ்க்கை பற்றி இந்நூல் ஆராய்கின்றது.

வாழ்க்கை பற்றி ஆராய்வதன் மூலம் ஒவ்வொரு மனிதனும் பூரண வாழ்க்கை வாழ்வதனையும், மனிதனின் இலட்சியம் நிறைவேறுவதனையும் குறிக்கோளாகக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கை பற்றிய போதிய விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன என நம்புகின்றேன். இவை பத்திரிகை, வானொலி, சஞ்சிகை, நூல்கள் ஆகியவற்றிலிருந்தும் ஆசிரியர்கள், நண்பர்கள் ஆகியோரிடமிருந்தும் மற்றும் அனுபவத்தைக் கொண்டும் என் சிந்தனைக்கு எட்டியவையையும் கொண்டு இந்நூலினை உருவாக்கியுள்ளேன். இந்நூல் பற்றிய விமர்சனங்களும், ஆலோசனைகளும் உவந்து ஏற்றுக் கொள்ளப்படும் என்பதை மனப்பூர்வமாக கூறிக் கொள்கின்றேன். இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாருடைய மனதையும் புண்படுத்துமாக இருந்தால் மன்னிக்கவும்.

இந்நூல் உருவாக்குவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்த அனைவருக்கும் எனது மனநிறைந்த நன்றிகள் உரித்தாகுக.

**வணக்கம்**

**செ. பிரதீபன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அறிவு
2. குழந்தை
3. தாய்
4. தந்தை
5. பிள்ளை
6. அறிந்தவை பல அவற்றில் சில
7. சுயபுத்தி
8. கடமை
9. கல்வி
10. மாணவர்கள்
11. நட்பு
12. சாதி
13. மதம்
14. பணம்
15. அன்பு
16. காதல்
17. திருமணம்
18. சீதனம்
19. கணவன்
20. மனைவி
21. குரு
22. மனதால் வாழ்வது தான் வாழ்க்கை
23. திருந்து திருத்து
24. நீ உனக்காக வாழ்
25. உறவுகள்
26. உதவுவதில் இன்பமுண்டு
27. அநாதையின் வாழ்வு
28. விதவை
29. ஊனம்
30. மனநோயாளி
31. குற்றவாளி
32. அழகு
33. குணம்
34. பயனுள்ள வாழ்க்கை
35. ஆன்மீகம்
36. நான்
37. நிலையாமை
38. இதுதான் மாயை
39. கவலை
40. பாபம்
41. கடவுள்
42. இருக்குமிடம்
43. துறவு
44. மனத்திருப்தி
45. அமைதி
46. தியானம்
47. மரணபயம் வேணாம் மரணம் உனக்கு வேணும்
48. ஆவிகள்
49. உயிர்
50. உடல்




பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 01. அறிவு

சாஷ்திரங்கள் கூறுகின்றன என்பதற்காக நம்பாதீர்கள். உங்கள் தேசிய பாரம்பரியம் என்பதற்காக நம்பாதீர்கள். சிறுவயதிலிருந்தே உபதேசிக்கப்பட்டது என்பதற்காக நம்பாதீர்கள். உங்கள் அறிவால் உணர்ந்து பாருங்கள். உங்கள் அறிவால் ஆராய்ந்து பாருங்கள்.

பகுத்து உணர்ந்து கொண்ட பிறகு,

அது எல்லோருக்கும் நன்மை தரும் என்று கண்டால் அதனை நம்புங்கள். வாழ்வில் அதனைச் செயல்ப்படுத்துங்கள். மற்றவர்களும் அதைப் பின்பற்ற உதவுங்கள்.

**- சுவாமி விவேகானந்தர் -**

என்று நீ உன்னை உணர்கிறாயோ
அன்றே நீ இங்கிருக்க விரும்பாய்.

## 02. குழந்தை



எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே அது நல்லவன்(ள்) ஆவதும்
அது கெட்டவன்(ள்) ஆவதும் அன்னை வளர்ப்பினிலே

**- வானொலியிலிருந்து -**

## 03. தாய்



பிள்ளை பெற்றவள் தான் தாய்.

மாதா இயேசுவைப் பெற்றுத் தாயானாள்.

குந்திதேவி கர்னனைப் பெற்றுத் தாயானாள்.

ஆனால் தந்தை மனிதனில்லை.

தாயும் தந்தையும் மனிதனாக இருந்து பிள்ளை பெற்றவர்களும் உண்டு அவ்வாறு பெற்றவளும் தாய்.

ஆனால்

இவள் தான் தாய் என ஒருவராலும் நிரூபிக்க முடியாது. விஞ்ஞான முறையில் மரபனுச்சோதனை மூலம் நிரூபித்தாலும் அதுவும் நாளைக்குப் பொய் எனக் கூறும் காலம் வரும். ஏனெனில் விஞ்ஞானம் பொய்ப்பிக்கப்படுகின்ற துறையாகும்.

பூமிதான் மையத்தில் இருக்கிறது என்றார்கள். பின்னர் சூரியன்தான் மையத்தில் இருக்கிறது என்றார்கள். இப்போது இவற்றுக்கும் அப்பால் வேறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய சூரியன் இருக்கிறது என்று கூறுகிறார்கள். எனவே விஞ்ஞானம் நிலையற்றது. நம்பமுடியாது.

தந்தை இவர் தான் என நிரூபிக்கத் தாய் உண்டு. தாய் இவள் என நிரூபிக்க யார் உண்டு.

கண்ணனைப் பெற்றவர்கள் தேவகியும், வாசுதேவனும். ஆனால் வளர்த்தவர்கள் யசோதையும், நந்தகோபனும். தாய் மயக்கத்தில் இருக்கும் போது நடைபெற்ற சம்பவம்.

தாயின் முகம் அல்லது தந்தையின் முகம் அல்லது தாயின் குணம், தந்தையின் குணம் எனக் கூறியும் இவன் தான் என் மகன், இவள் தான் என் மகள் என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் மனிதன் எதை அதிகமாக நினைக்கிறானோ, எண்ணுகிறானோ. அதுவே ஆகிறான்.

இவை இவ்வாறு இருந்த போதிலும் தாய் இவள் தான் என அறியவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் நீ பிறந்து விட்டாய். உன்னை வளர்த்தவளை உனக்கு நினைவிருக்கும் நாளிலிருந்து தெரிந்தவளைத் தாய் என்றே கொள்ளவேண்டும். அவளுக்குக் கடமையைச் செய்யவேண்டும்.

ஏன் பிறந்தாய் மகனே?
ஏன் பிறந்தாயோ?
நான் பிறந்த காரணத்தை அறிய முன்
நீ ஏன் பிறந்தாய்?

என தாய் பிள்ளையிடம் கேட்கக் கூடாது. தாய் தான் பிள்ளைக்குக் கூறவேண்டும். நீ ஏன் பிறந்தாய்? என்ன செய்யவேண்டும்? எப்படி வாழ வேண்டும்? பிறந்ததின் நோக்கம் என்ன? என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். இவற்றை அறியாமல் பிள்ளை பெற்றால் பிள்ளையால் துன்பம் தான் வரும்.

தாய்கள் பல விதம்
தாய்களின் நோக்கம் பல விதம்
அவற்றில் நீ எந்த விதம்

என் பிள்ளை பணம், நிலம், பதவி, சொத்து என நல்லா இருந்தால் போதும் என நினைப்பாள் ஒரு தாய்.

என் பிள்ளை படித்து கௌரவமாக நாலுபேர் மதிக்க வாழ வேண்டும் என நினைப்பாள் ஒரு தாய்.

என் பிள்ளை எங்கிருந்தாலும் சந்தோஷமாக இருந்தால் அதுவே என் சந்தோஷம் என நினைப்பாள் ஒரு தாய்.

என் பிள்ளை எங்கிருந்தாலும் பரவாயில்லை. எனக்குக் கெட்ட பெயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கித்தராமல் இருந்தால் போதும் என நினைப்பாள் ஒரு தாய்.

என் பிள்ளை என்னவாக இருந்தாலும் பரவாயில்லை. என் கூடவே இருந்தால் போதும் என நினைப்பாள் ஒரு தாய்.

இவ்வாறு இன்னும் கூறிக்கொண்டே போகலாம். ஆனால் ஒரு தாய் என் பிள்ளை அநாதையாக இருந்தாலும், ஏழையாய் இருந்தாலும், நல்லவனாக வாழ வேண்டும் என நினைத்து வளர்க்க வேண்டும்.

தாய் தன் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பும் போது நானாவது படிப்பறிவில்லாமல் வளர்ந்து விட்டேன், நீயாவது படிப்பறிவோடு வளரவேணும். நல்லவனாக வரவேண்டும் என நினைத்தே பாடசாலை அனுப்புகிறாள்.

ஒரு குடிகார, பொல்லாத கணவனுடன் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு இரண்டு குழந்தைகள். ஒரு நாள் ஒரு குழந்தை நோயினால், வறுமையினால் இறந்து விட்டது. மறு குழந்தையும் இறக்கும் தறுவாயில் கிடக்கிறது. கணவனோ மது போதையில் கிடக்கிறான். அவள் அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு கணவனின் ஊதாரி நண்பனிடம் சென்று கைமாறாகப் பணம் கேட்கிறாள். குழந்தையைக் காப்பாற்ற அதற்கு அவன் என் ஆசையைத் தீர்த்து வைத்தால் பணம் தருவேன் என்கிறான். அதற்கு அவள் என் குழந்தை செத்தாலும் பரவாயில்லை. நான் இந்தப் பிள்ளைக்குக் கெட்டதாயாக இருந்து வளர்த்து என்ன பயன். நான் இந்தப் பிள்ளைக்கு நல்ல தாயாகவே இருக்க விரும்புகிறேன். இந்தப் பணம் எனக்குத் தேவையில்லை என கூறிவிட்டுத் தன் வீடு நோக்கி நடையைக் கட்டுகிறாள்.

**– "சாமிலாவின் ராகம்" நாவலிலிருந்து –**

ஒரு தாய் குழந்தையைக் குப்பைத் தொட்டியில் போடுவதை விட கொல்வதே மேல். அல்லது அப்பிள்ளையை ஆச்சிரமத்தில் வளர்க்க கொடுக்கலாம்.

திருவள்ளுவரும், ஔவையாரும் அண்ணன் தங்கை. இவர்களைப் பெற்ற தாயும், தந்தையும் பெற்றவுடன் அவ்விடத்திலேயே விட்டு விட்டுச் சென்றவர்கள். ஆண்டாள், சீதை என்போரும் இதே போல் புழுதியிலே கிடந்தவர்கள். இவர்களைப் பெற்றவர்களும் அதே இடத்தில் விட்டு விட்டுச் சென்றவர்கள். இவ்வாறு குழந்தையை எறிந்து விட்டு சென்றவர்கள் மகான்கள். ஏன்? இதைச் சிந்திக்க வேண்டும்.

சிந்தித்தால் சிரிப்பு வரும்
மனம் தெளிந்தால்
உண்மை புரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 04. தந்தை




தாய் கூறி அறிமுகப்படுத்தியவர் தான் தந்தை.

தந்தை மகற்கு ஆற்றும் நன்றி – அவையத்து
முந்தி இருப்பச் செயல்.

தந்தை தன் மகனுக்குச் செய்யும் உதவி கற்றவர் கூட்டத்தில் கல்வியில் வல்லவனாக அவன் முற்பட்டிருக்கச் செய்வதுதான்.

**– திருவள்ளுவர் –**

## 05. பிள்ளை



உன் தந்தைக்குக் களவு, பொய் பிடிக்காது எனின் உனக்குக் களவு, பொய், சாதி, புலால், மது பிடிக்காமல் வாழப்பழகு. உன் பிள்ளைக்குக் களவு, பொய், சாதி, புலால், காமம், மதம் பிடிக்காமல் வாழப்பழக்கு. அவன் இந்த உலகிலிருந்து, துன்பத்திலிருந்து தப்பிக்க வழியைக் காட்டு. அவன் பேரின்பம் பெறுவான். இதுவே வீட்டு நெறி . பயனுள்ள வாழ்க்கை.

தாயென்ற ஒரு தெய்வம் வீட்டோட இருக்கு
நீ தனித்தனியா கோவில் குளம் அலைவதும் எதுக்கு?

**– வானொலியிலிருந்து –**

உலகத்தில் உன்னோடு இருக்கும் மேலான சொத்து தாய். குளத்தில் நீர் இருக்கும் வரைதான் கொக்கிருக்கும், மீனிருக்கும், தவளையிருக்கும். ஆனால் நீர் வற்றிவிட்டால் இவை அனைத்தும் இருக்கமாட்டா. ஆனால் நீர் இருக்கும் போது சந்தோஷமாய் இருப்பதும், நீர் வற்றிவிட்டால் கவலையோடு கூடவே இருக்கும் தாமரைக் கிழங்கே தாய். தாயை விட மேலானது எனின் அது கடவுள் தான்.

யாரை மறந்தாலும் தாயை மறவாதே
தாயை மறந்தாலும் உன்னை மறவாதே.

நீ உன் தாயை இறுதி மூச்சு உள்ள வரை நினைக்க வேண்டும். நீ உன் தாயின் இறுதி மூச்சு உள்ளவரை நினைக்க வேண்டும். அருகில் இருந்தாலும் நினைக்காமல் இருக்காதே.

நீ உன் நாய்க்குச் சோறு போடாவிட்டாலும்
நீ உன் தாய்க்குச் சோறு போடு.
அதுவே உன் கடமை.

தாய் சொல் கேட்கமாட்டோம்
கோவிலுக்குப் போகமாட்டோம்
தாயை விட்டுப் போகமாட்டோம்
யாரையும் விரும்ப மாட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்காக எதுவும் வேண்டமாட்டோம்
எதற்காகவும் மயங்கமாட்டோம்.
என்று இன்றே
சத்தியம் செய் உறுதி கொள்.
தாயுடன் இருப்போம்
நூலகத்திற்குப் போவோம்
தாய்க்காகத் தற்கொலையும் செய்வோம்
நம்மை விரும்புவோரை விரும்புவோம்
கடவுளுக்காக எதுவும் வேண்டுவோம்
நல்லதற்கே மயங்குவோம்.
என்று இன்றே
சத்தியம் செய். உறுதி கொள். ஏனெனில்
"நீ மறைமுகமாகக் கடவுளை அடைய இது தான் வழி"

## 06. அறிந்தவை பல அவற்றில் சில

பணம், பதவி, சொந்தம், பந்தம், பொருள், நிலம், சொத்து என நல்லா இருக்காதே. அனாதையாய், ஏழையாய் இருந்தாலும் நல்லவனாய் இரு என்று உபதேசித்துத் தன் குழந்தையைப் பேணி வளர்க்க வேண்டும்.

விலக்க வேண்டிய மூன்று
மதுபானம், புகைத்தல், சூதாடல்
மதிக்க வேண்டிய மூன்று
வயது வந்தவரை, சமயம், சட்டம்
வியக்க வேண்டிய மூன்று
அறிவு, அழகு, இசை
விருத்தி செய்ய வேண்டிய மூன்று
இரக்கம், மகிழ்ச்சி, மனத்திருப்தி
வளர்க்க வேண்டியது மூன்று
அறிவு, அன்பு, நண்பர்கள்
ஆள வேண்டியது மூன்று
நாக்கு, மனநிலை, செயல்
பாதுகாக்க வேண்டியது மூன்று
நேர்மை, தூய்மை, உண்மை
தடுக்க வேண்டியது மூன்று
சோம்பல், பொய்மை, கொச்சைப் படுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவர்களைக் குறை சொல்வது,
கேலி பண்றது,
நையாண்டி பண்றது,
இது மாதிரியான நகைச்சுவையெல்லாம்
நல்லது செய்வதில்லை.

– தென்கச்சி சுவாமிநாதன் –

பிறர் நம்மைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள்
என்பதை விட, இறுதியில் நாம் எந்த
நிலையில் இருப்போம் என்பதே முக்கியம்.

மக்கள் கெட்ட காரியங்களைச் செய்தால் நிந்திக்காதே. சும்மா அவதானி. ஆனால் நீ கெட்டடைச் செய்யாதே சும்மா பார்.

– யோகர் சுவாமிகள் –

மனச்சாட்சி எப்பொழுதும் சரியான வழியை மனத்திற்குக் காட்டுகிறது. செய்யும் செயல் சரியல்ல என்றதும் அதன் படியே நடந்து கொள். உண்மையைப் பேச முயற்சி செய்.

– சுவாமி விவேகானந்தர் –

எப்பொழுது நீ செய்த காரியத்தைத் தவறு என்று உணர்கிறாயோ அக்கணமே அதைச் சரி செய்துவிடு. தள்ளிப்போடாதே. காலதாமதப் படுத்தாதே.

– சத்திய சாய்பாபா –

ஆரம்ப காலத்தில் தீயோரின் தொடர்பைத் தவிர்த்துவிடு. உலகியலில் நாட்டம் உள்ளவர்களுடன் தொடர்பு கொள்ளாதே. அது உன்னுடைய மனப்போக்கையே மாற்றிவிடும். உனக்கு ஏதாவது தீங்கு நேருமாயின் இறைவன் உன்னிடம் விளையாடுகிறான் என நினைத்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் இரு.

– சுவாமி விவேகானந்தர் –

யாராவது ஒரு மனிதரைக் கண்டு நாம் அஞ்சுகிறோம் என்றால் ஏதோ ஒரு விதத்ததில் அந்த மனிதரிடம் நாம் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்று தான் அர்த்தம். ஒரு மனிதரைப்பற்றிப் பிறரிடம் புறங்கூறியிருந்தால் அந்த மனிதரைப் பார்க்கும் தோறும் நமது மனச்சாட்சி உறுத்திக் கொண்டே இருக்கும்.

மனமறிந்து ஒருவருக்கும் நாம் தீங்கு செய்து அது யார் கண்களிலும் படாமலிருந்தாலும் தீங்கு செய்தவர் நாம் தான் என்று யாரும் கண்டு பிடிக்காத நிலையிலும் மனம் அமைதியை இழந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமறிந்து பிறர் நோகும் வண்ணம் நடந்து கொள்ளக் கூடாது. முதுகுக்குப் பின் பிறரை விமர்சனம் செய்யும் கோழைத்தனத்தை விட்டு விட வேண்டும்.

உங்கள் நடவடிக்கைகள் எதிலுமே ஒழிவு மறைவு இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். மூடி மறைத்து எந்தச் செயலிலும் ஈடுபடாதீர்கள். மறைவாகச் செயற்படும் எதுவுமே மனச்சாட்சிக்கு விரோதமாகத்தான் இருக்கும். நல்ல எண்ணங்களையே நினையுங்கள். மோசமான சிந்தனைகள் உங்கள் மனத்தை ஆக்கிரமிக்காமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**- நற்சிந்தனையிலிருந்து -**

புனிதமான செயல்களால் வாழ்வதே வாழ்வு.

தர்மத்தைச் செய் கர்மத்தைச் செய்யாதே.

மனத் திருப்தியே விடுதலைக்கு வழி.

நீயும் வாழ், பிறரையும் வாழவிடு.

நீ மற்றவர்களைக் கண்டு பயப்படாதே.

இரக்கம் காட்டு ஆனால் ஏமாந்து போகாதே.

மௌனமும், தன்னடக்கமும் தலை சிறந்த குணங்கள்.

தனிமையில் இருந்தாலும் இறைவனை நினைத்திரு.

நாம் ஒரு இடத்திற்குப் போனால் அங்கே இருப்பவர்கள் குற்றம் கண்டுபிடிக்க வந்து விட்டான் என்று முகம் சுளிக்கும் படியாக இருக்கக் கூடாது.

உறவுகளில் சிக்கல் எழும் போது, தடங்கல் தோன்றும் போது, மனவருத்தம் மிகும் போது, தவறு செய்த உணர்வு நம்மைத் தாக்கும் போது, அதை உள்ளத்திலேயே போட்டு மனத்தைக் கஷ்டப்படுத்தி விஷயத்தைப் பெரிது படுத்தாதீர்கள்.

யாரிடமாவது சென்று மன உளைச்சலை, பாரத்தை இறக்கி வையுங்கள். யாரிடம் நமக்கு மிகுந்த மரியாதை உண்டோ, யாருக்கு நம்மிடம் அக்கறை உண்டோ, யார் நமது விஷயங்களைப் பொறுமையுடன் கேட்டு அனுசரணையுடன் அணுகுவார்களோ அவர்களோடு சுமைகளைப் பகிர்ந்து கொள்வது நல்லது.

**- பத்திரிகையிலிருந்து -**

கடவுள் ஒன்று தான் இருக்கும்.

தாய் ஒன்று தான் இருப்பாள்.

காதலி ஒன்று தான் இருக்கவேண்டும்.

காதலன் ஒன்று தான் இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் ஒன்று தான் இருக்கவேண்டும்.
மனைவி ஒன்று தான் இருக்கவேண்டும்.
இவை மனதில் இருந்தால் நீ மனிதன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பது எது என அறிந்து வாழ். இல்லையேல் சாவது மேல்.

ஆரம்பத்தில் ஒரு தவறு உண்டான போது அதற்கு நாம் தான் காரணம் என்று பொறுப்பேற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் வேண்டும். அப்போதுதான் அந்தத் தவறு ஏன் நடந்தது? அது மேற்கொண்டு நடக்காமல் எப்படித் தவிர்ப்பது? என்று நம்மால் தீர யோசித்து, வழி காணமுடியும். உண்மையில் நம்மீதுதான் தவறு என்றால் நம்மை நாம் திருத்திக் கொள்ளலாம். அப்படி இல்லை யென்றாலும் கூட சம்பந்தப்பட்டவர் மறுபடி அந்தத் தவறைச் செய்யாதவாறு நம்மால் தடுக்க முடியும்.

**- பத்திரிகையிலிருந்து -**

சரி எது, பிழை எது என்று சிந்திக்கவல்லது இப்பிறவி. சிந்திக்கும் திறன் உண்டு உனக்கு. சரி என்று படுகிறதை உடனே எட்டிப்பிடி. நீ உச்சத்தில் இருக்கும் விடயம் என்னவென்று உணர்ந்து கொள்வாய்.

தாயைத் தேர்ந்தெடுக்கும்
தந்தையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை
உன்னிடத்தில் இல்லை.
குருவைத் தேர்ந்தெடுக்கும்
நண்பனைத் தேர்ந்தெடுக்கும்
மனைவியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை
உன்னிடத்தில் உண்டு.

**- வானொலியிலிருந்து -**

8238 cc

தெரிந்தும் தெரியாமல் நடந்திருந்தால் அதை
திரும்பவும் வராமல் பார்த்துக்கோ

**- வானொலியிலிருந்து -**

பணத்தை விட அறிவு உயர்ந்தது
அறிவை விட ஒழுக்கம் உயர்ந்தது

KOHA-JPL



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
191021

பிரார்த்தனை செய்யும் உதடுகளை விட
உதவி செய்யும் கரங்கள் உயர்ந்தவை.

மற்றவருடன் நீ பேசுகையில் அவர் கண்களை நோக்கி பாராமல், உடலை மேயாமல் புருவ மத்தியை நோக்கிப் பேசு. மற்றவர் உன்னுடன் பேசுகையில் அவரது புருவமத்தியையோ, கண்ணையோ நோக்கிப் பாராதே.

**- மனோதத்துவம் -**

உனக்கு தெரிந்தவற்றை பிறருக்கு சொல்ல வேண்டும் என்னும் ஆவலின் சக்தி மிக வலிதேயெனினும் தெரிந்தவற்றை வெளியிடாது அடக்கும் சக்தி அதனிலும் வலிதானதாகும். நாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகமும் இவையெல்லாம் உள்ளான இரகசியம்.

**- மர்மசாஸ்திரம் -**

ஓர் புலியும் கூட நமது கண்களுக்கு மறைந்தே நம்மேல் பாய்வதற்கு எத்தணிக்கும். எந்த மிருகத்தையும் நமது பார்வையை விட்டகலாமல் செய்வோமாயின் அதனால் ஒன்றும் செய்ய முடியாது. இது உன் கண்களால் வெளியிடும் சக்தியின் தன்மையே காட்டுகிறது.

**- சுவாமி விவேகானந்தர் -**

பிறர் மனத்தை உன் நாக்கால் புண்படுத்தாதே. ஆனால் பிறர் நாக்கு உன் மனத்தை புண்படுத்தாதபடி வல்லமையோடு வாழக் கற்றுக்கொள்.

வண்டு மலரிலிருந்து தேன் எடுக்கும் போது மலருக்குச் சேதமில்லாமல் அதன் வண்ணமும் மணமும் சிதையாமல் தேனை மட்டும் கொண்டு செல்வது போல நாம் எதனிலும் இருந்து நன்மையை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

எந்தக் காரியத்தை செய்தால் பின்னால் மனம் இன்பமடையுமோ அதன் பயனை உள்ளக் களிப்போடு அனுபவிக்க வேண்டியிருக்குமோ அதுவே நற்செயல்.

தீய ஒழுக்கத்துடன் அடக்கமில்லாமல் ஒருவன் நூறு வருடம் வாழ்வதைக் காட்டிலும் நல்ல ஒழுக்கத்துடன் தியானம் செய்து வரும் ஒருவன் ஒரு நாள் வாழ்வதே மேலானது.

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது. உன் கண் தெளிவாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாய் இருக்கும்.

கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள்

தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்கு திறக்கப்படும்.

**- இயேசுநாதர் -**

உனக்கு எது தேவையோ அதைக் கேள், அதைத் தேடு, அதனை விசாரணை செய். அது உன்னை வந்து சேரும். என்னால் முடியும், எல்லாமே எனக்கு சாத்தியம். வெற்றி பெற்றே தீருவேன், எடுத்த காரியத்தை முடிக்காமல் விடமாட்டேன் என்பன போன்ற சஜஷன்களை உங்களுக்கு நீங்களே ஏற்படுத்திக் கொள்ளுங்கள். மந்திரம் போல இந்த வாசகங்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் ஜெபித்துக் கொண்டே இருங்கள். உங்களிடம் உள்ள காந்தசக்தி உங்களை ஓர் ஆக்கபூர்வ மனிதராக ஆக்கிவிடும்.

**- மனோதத்துவம் -**

மனிதன் எப்படிப்பட்டவன் என்பதை அவன் அணியும் உடை எடுத்துக் காட்டுகிறது. ஒருவன் அணியும் உடை அவனுடைய குணத்தின் வெளிப்பாடாக அமைகிறது என்பது முற்றிலும் உண்மை. எனவே நீங்கள் அணியும் உடை உங்களுடைய எண்ணங்களின் பிரதிபலிப்பாக இருப்பது தவிர்க்க முடியாதது.

சூழ்நிலைகளுக்குப் பொருத்தமான முறையில் உடை உடுத்து, உடை உன்னைப் பற்றி ஒரு செய்தியை அனுப்புகிறது.

**- ஷேக்ஸ் பியர் -**

கிட்டாத ஒரு பொருளை அடைவதற்கு முயற்சி செய்வது இயற்கை. அப்பொருள் கிட்டிவிட்டால், அதை அடைந்து விட்டால் அதன் மீதுள்ள பற்றும், பாசமும் குறைந்து விடுகிறது. இது எதுவானாலும் பொருந்தும்.

தேடல் என்பது உள்ளவரை
வாழ்வில் ருசியிருக்கும்
தேடித்தேடி மனது தொலைகிறதே

இவ்வுலக வாழ்வில் நமக்கு வழிகாட்டும் மனச்சான்றை மதித்து ஒழுகினால் அதன் வழியாக மறுவுலக வாழ்வை இன்பமயமான வாழ்வாக நமக்கு இறைவன் வழங்குவார்.

**- பத்திரிகையிலிருந்து -**

மற்றவர்களை ஏமாற்றலாம், உன்னை நீ ஏமாற்ற முடியாது. மனச்சாட்சியின் படி நடந்து கொண்டு போக எல்லாம் வலிய வரும்.

உலகத்தை நம்பவேண்டாம். அது சொன்னதெல்லாம் தந்ததில்லை. உங்களை நம்புங்கள். நீங்கள் விரும்பியதெல்லாம் பெறலாம்.

என்ன வந்தாலும் பொறுக்கக்கூடிய திறமை வேண்டும். எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர் கருத்தை மதிக்கவும், அது நன்மை பயக்குமாயின் அதை ஏற்றுக் கொள்ளவும் நம் மனதை பழக்கப்படுத்த வேண்டும். எங்கிருந்து வந்தாலும், யாரிடமிருந்து வந்தாலும் கருத்துக்கள் நல்லனவையாக இருந்தால் அவற்றை நீ ஏற்றுக் கொள்ளலாம்.

வாழ்க்கைக்கு நன்மைதரும் ஏழு விடயங்கள்

ஏழ்மையில் நேர்மை
கோபத்திலும் பொறுமை
தோல்வியிலும் விடாமுயற்சி
வறுமையிலும் உதவி செய்யும் மனம்
துன்பத்திலும் துணிவு
செல்வத்தினுள் எளிமை
பதவியிலும் பணிவு

வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஏழு விடயங்கள்

சிந்தித்துப் பேசவேண்டும்
உண்மையைப் பேசவேண்டும்
அன்பாகப் பேசவேண்டும்
மெதுவாகப் பேசவேண்டும்
சமயம் அறிந்து பேசவேண்டும்
இனிமையாகப் பேசவேண்டும்
பேசவேண்டியவர்களோடு பேசவேண்டும்

முக்கியமாகக் கவனிக்கவேண்டிய ஏழு விடயங்கள்

உன் வார்த்தைகளைக் கவனி
உன் செயலைக் கவனி
உன் நடத்தைகளைக் கவனி
உன் இதயத்தைக் கவனி
உன் கடமையைக் கவனி
உன் தாயைக் கவனி
உன் உடலைக் கவனி

அடுத்தவரைப் பற்றி விமர்சிப்பதைப் பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள். பிறரைக் குறை கூறுவதை அறவே தவிர்த்து விடுங்கள். நிறைவேற்ற முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குறுதிகளை வாரி வழங்காதீர்கள். அறிய விரும்புவோர்க்கு அறிவிக்க மறுக்காதீர்கள். யாரையும் விரல் சுண்டிக் கூப்பிடாதீர்கள்.

## 07. சுயபுத்தி

அவர் சொன்னார்
இவர் சொன்னார்
அன்னை சொன்னாள்
ஆசிரியர் சொன்னார்
அதிபர் சொன்னார்

என நீ எதையும் செய்யாதே. உனக்கு நீ செய்வது சரி எனப்பட்டால் எதையும் செய் மற்றவர் மேல் பழி போடாதே. உன்மேல் பழியைப் போடு. நீ பழி பாவத்தைச் சுமக்க விரும்பாவிட்டால் நல்லது எது கெட்டது எது என உனக்கு அறியத் தெரியவில்லை என ஒத்துக்கொள்.

## 08. கடமை

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே

**- கீதாசாரம் -**

உயிர் இருக்கும் போது
கூடவே இருந்து குழி பறிக்காதே.
உயிர் இல்லாத போது
கூடவே இருந்து
கூட்டுக்கு குழி பறி.
அது தான் நீ
உன் நண்பனுக்குச் செய்த கடமை
உன் தாய்க்குச் செய்த கடமை
உன் துணைக்குச் செய்த கடமை
உன் கடவுளுக்குச் செய்த கடமை
நீ கடமைக்கு வாழாதே
நீ உன் கடமைக்காக வாழ்
கடமையை கடமைக்காகச் செய்யக்கூடாது
கடமையை கடமையாகச் செய்ய வேண்டும்
நாம் நம் கடமையைச் செய்வது
நமக்கு நாமே போட்டுக்கொள்ளும் உரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
191621

உன்னை இங்கு அனுப்பியவரை நினைத்து எந்தச் செயலையும் அவருக்காகச் செய்தாய்யானால் உனக்கு துன்பமில்லை.

அவரை நீ மறந்து விட்டுச் செய்த செயலெல்லாம் நான் தான் செய்தேன் என்று கூறிக் கூறி துன்பத்தையும் இன்பத்தையும் நீயே அனுபவிக்கிறாய்.

தபால்க்காரன் கடிதம் உனக்கு தந்தவனுமில்லை உன்னிடமிருந்து வாங்கியவனுமில்லை. அவன் தன் கடமையையே செய்கிறான். கடிதத்தில் வரும் துன்பச்செய்தியும், இன்பச்செய்தியும் தபால்காரனைப் பாதிப்பதில்லை. அவ்வாறே நீயும் உன் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே. எதிர்பார்த்தால் இன்பமும், துன்பமும் உனக்குத்தான் உண்டாகும்.

தாய்க்கு நீ நல்லவனாய், நல்லவளாய் இரு. இது உன் கடமை.

கடமையை செய் பலனை எதிர்பாராதே. அமைதி தானாக வரும். கடவுள் தானாகத் தெரியும். ஆனந்தம் தானாக வரும்.

## 09. கல்வி



கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

- திருவள்ளுவர்

காதல் வந்தால் நீ கவிஞனாகிறாய்
கல்வி வந்தால் நீ கடவுள் ஆகிறாய்

வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு, வாழ்க்கையின் அர்த்தத்தை புரிவதற்கு, வாழ்க்கையின் இலட்சியத்தை அடைவதற்கு படிப்பறிவு மட்டும் போதாது.

அன்பு, நட்பு, காதல், கடவுள் என பலதையும் அறிய, அளக்க உன்னையும் நீ அறிய பயன்படுவது அறிவு. சிவனுக்கு மட்டுமே மூன்றாவது கண்ணாக நெற்றியில் கண் இருக்கிறது. என நம்பாதீர் அனைவருக்கும் நெற்றிக்கண் உண்டு. ஆனால் நாம் திறப்பதில்லை.

கல்விக்காக எதையும் இழக்கலாம் ஆனால்
எதற்காகவும் கல்வியை இழக்கக் கூடாது.

உணவு மற்றும் உடைகள் என்பவற்றை ஒருவனுக்கு அளிப்பதை விட வித்யாதானம் அல்லது அறிவுத்தானம் எவ்வளவோ மேலானது.

ஒருவனது உயிரைக்காப்பதை விட அது சிறந்தது. ஏனென்றால் மனிதனின் உண்மையான உயிர் நாடி, உண்மையான வாழ்க்கை அறிவில் மட்டுமே அமைந்துள்ளது. அறியாமை என்பது மரணம். அறிவுதான் வாழ்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாமையிலும், துன்பத்திலும் தட்டுத்தடுமாறிக் கொண்டிருக்கின்ற வாழ்க்கை பயனற்றது.

படிப்பெல்லாம் படிப்பல்ல
உன்னை நீ படிப்பதே படிப்பு.

சுவாமி விவேகானந்தர் ஒரு ஆங்கில மானிப்பட்டதாரி. அவர் தன்னை உணர்ந்த பின் கூறிய விடயம் என்னவெனில் நான் படிக்க வேண்டியதைப் படிக்காமல் விட்டு விட்டேன் இவ்வளவு காலமும் என கூறி அனைத்தையும் விட்டு விட்டு குருவாக இராமகிருஷ்ணரை ஏற்றுக்கொண்டு மேலும் தெளிவடைந்தார்.

எவருக்கும் குரு, நூல் நிலையம்
உன் சுதந்திரத்திற்காக இந்நூல் நிலையம்.
உன் ஆத்ம மலர்ச்சிக்காக இந்நூல் நிலையம்.
உன் அறிவு வளர இந்நூல் நிலையம்.
உன் அறியாமையை விலக்க இந்நூல் நிலையம்.
உன் அமைதிக்காக இந்நூல் நிலையம்.
உன் சிந்தனையைத் தூண்ட இந்நூல் நிலையம்.
உன் அறிவுப் பசியை போக்க இந்நூல் நிலையம்.
உன் ஆனந்தத்திற்காக இந்நூல் நிலையம்.
உன்னை உணர வைப்பது இந்நூல் நிலையம்.
உன் குருவே இந்நூல் நிலையம்.

" கத்தியைத் தீட்டாதே உன் புத்தியைத் தீட்டு "

- வானொலியிலிருந்து -

## 10. மாணவர்கள்



விழித்துக் கொண்டோர் எல்லாம்
பிழைத்துக் கொண்டார் பின்னால்
குறட்டை விட்டோரெல்லாம்
கோட்டை விட்டார்
தூங்காதே தம்பி தூங்காதே
தூங்காதே தங்கச்சி தூங்காதே

- வானொலியிலிருந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களே!

" விளையும் பயிரை முளையிலே தெரியும்" என்ற பழமொழி பயிர்களுக்குப் பொருந்தலாம். ஆனால் மனிதருக்குப் பொருந்த வேண்டும் என்ற கட்டாயமில்லை. உள்ளிருக்கும் ஆற்றல்கள் வேறு, வெளித்தோற்றம் வேறு.

**- "வெற்றி பெறுங்களேன்" நூலிலிருந்து -**

சிறு வயதில் முட்டாளாகத் திரிந்த எடிசன், ஆசிரியர்களால் கைவிடப்பட்ட எடிசன் தன் தாயின் ஊக்கத்தினால் தன் திறமையைக் காட்டி மின்விளக்கைக் கண்டு பிடித்தான்.

உன்னாலும் சாதிக்க முடியும்

அவ்வாறு சாதிச்சு என்ன பண்ணப் போகிறாய்?

அணுகுண்டு பெரிதல்ல அதைக் கண்டு பிடித்த மூளை தான் பெரிது. மாபெரும் ஆற்றல் மனிதனிடம் தான் மறைந்து கிடக்கிறது. உன்னிடமும் இருக்கிறது. ஆனாலும் மனிதனின் மூளையைப் படைத்த இறைவனே பெரிது.

நீதான் கண்டு பிடித்தேன் என்று கூறுகிறாய். துன்பமும் உனக்குத்தான், இன்பமும் உனக்குத்தான் வந்து சேர்கிறது. இதில் கடவுளுக்குப் பங்கில்லை.

மாணவனாக நீ இருக்கும் போது நீ நகத்தை வெட்டு, தலைமயிரை வெட்டு, தலைமயிரை மேவி வார வேண்டும் அல்லது கன்னத்தில் உச்சி பிரித்து வார வேண்டும். முகச்சவரம் முழுவதும் செய்யலாம். மீசையை விட்டு மீதியைச் சவரம் செய்யலாம். முகச்சவரம் செய்யாமல் இருக்கலாம் ஆனால் இது உனக்கு உகந்ததல்ல. வேறு எவ்விதமாக நீ அழகுபடுத்தினாலும் மாணவன் என்ற நிலையிலிருந்து ஒரு படி கீழ் இறங்கியவனாகிறாய்.

**- " வெற்றி பெறுங்களேன்" நூலிலிருந்து-**

மாணவியாக நீ இருக்கும் போது நகத்தை வெட்டு, தலைமயிரை சரி நடு உச்சி பிரித்து பின்னிக்கட்ட வேண்டும், உச்சி கோணலாக இருந்தால் உன் செயலும் கோணலாக அமைவதாகவே காட்டுகிறது.

**- மனோதத்துவ நூல்கள் -**

**- அழகுக் குறிப்பு நூல்கள் -**

ஒருவன் பிரம்மச்சரியத்தைத் தவறாமல் கடைப்பிடித்து வருபவனாக இருக்கிறான் என்றால் அவனுள் அளவற்ற ஆற்றல் வளருகின்றது. பிரம்மச்சரியம் மட்டும் சரிவரக் கடைப்பிடிக்கப்பட்டால் அது உயர்ந்த அறிவையும் ஆத்மீக சக்தியையும், நமக்களிக்கும் சாதனமாக மாறும்.

**- சுவாமி விவேகானந்தர் -**

படிப்பு முடிந்து வேலையிலோ, தொழிலிலோ அமர்ந்து பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைச் சரியாக அமைத்துக்கொண்டு காதல் செய்யட்டும் யார் வேண்டாம் என்று சொல்வார்கள்? ஆனால் அதை விட்டு விட்டுப் படிக்கிற வயதில், படிக்கிற காலத்தில் காதலிப்பது என்பது சமூக குற்றம்.

பெற்றோர்கள் தங்கள் உடமைகளை விற்று, உழைப்பை விற்று பிள்ளைகளின் எதிர்காலம் சிறக்க படிக்க அனுப்பினால், படிப்பதை விட்டு விட்டுக் காதலிப்பது குற்றம் தானே? வெற்றியின் படிக்கட்டை அடைந்தால் அங்கு உங்களுக்காகத் தேவலோக இராஜாக்களோ, கன்னிகைகளோ கூடக் காத்திருப்பார்கள். ஆனாலும் நீ விரும்புவதை விட உன்னை விரும்புபவரை எப்போதும் விரும்பலாம்.

- பத்திரிகையிலிருந்து -

## 11. நட்பு

நண்பர்கள், தெரிந்தவர்கள், அறிந்தவர்கள், அறிமுகமானவர்கள், நெருக்கமானவர்கள், மிகவும் வேண்டியவர்கள் எனப்பலவகைப் பெயர்கள் நட்புக்கு உண்டு. அது ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் நட்புத்தான்.

உண்மை அ[illegible]தி -



எப்படி இருந்த நான்
இப்படி ஆகிவிட்டேனே
என்று நீ துக்கப்பட்டால்
அது நீ விட்ட தப்பு.
எப்படி இருந்த நான்
இப்படி ஆகிவிட்டேனே
என்று நீ சந்தோசப்பட்டால்
அது நீ சேர்ந்த நட்பு.

துரியோதனன் கர்னனுடைய மானத்தைக் காப்பாற்றியமை. அர்ச்சுனனுக்கு நல்லுரை செய்து அவனைத் திருத்திய கண்ணன். இவை நட்புக்கு இலக்கணம். திருவள்ளுவரும் இதனையே கூறியுள்ளார்.

## 12. சாதி

சாதிகள் பல உண்டு.
திமிர்ச் சாதி.
பொறாமைச் சாதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரக்கமில்லாத சாதி
அறியாமைச் சாதி
பணச் சாதி
அகந்தைச் சாதி
சுயநலச் சாதி
மதச் சாதி
இனச் சாதி
மொழிச் சாதி
எனச் சாதிகள் பல
ஆனால் மனச்சாட்சி ஒன்று இருப்பவனே
மனித சாதி.

## 13. மதம்

உன் மதத்தைப் பின்பற்றி வாழ்.
பிறர் மதத்தை மதித்து வாழ்.
மதம் என்ற ஒன்று உனக்கு இருக்கவேண்டும்.
ஏனெனில் நீ பத்திரங்களில் பதிவதற்காக.
மதம் என்று ஒன்று உன் மனதில் இருக்கக்கூடாது.
மனம் என்ற ஒன்று உன் மனதில் இருக்கவேண்டும்.

## 14. பணம்

பணம் இருக்கும் மனிதரிடம் நல்ல குணமிருப்பதில்லை.
நல்ல குணமிருக்கும் மனிதரிடம் பணமிருப்பதில்லை.
ஏனெனில் பணம் இருக்கும் மனிதரிடம் நல்ல குணமிருப்பதில்லையே.

- வானொலியிலிருந்து -

செல்வம் இருந்தால் வசதிகள் வரலாம்
செல்வாக்கு வந்துவிடாது. ஆனால்
செல்வாக்குப் பெற்றுவிட்டால் செல்வம்
தானாகத் தேடி வரும்.

- பத்திரிகையிலிருந்து -

நீ பணம் சேர்க்க ஆசைப்படுகிறாய். அதே வேளையில் பணத்தைக் குறிக்கோளாக உடையவனை உலகம் முழுவதும் கொடியவன் என்று நினைக்கிறது என்பதை அறிந்தால் பணத்தைச் சேர்ப்பதற்கான போராட்டத்திலும் ஒருவேளை இறங்கத் துணியமாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் உன் மனமோ பணம் பணம் என்றே இரவும் பகலும் அலைந்து கொண்டிருக்கும். இது கபடத்தனம். இதனால் எந்தப் பலனுமில்லை.

உலகத்தில் குதித்துப் போராடு. படவேண்டிய வேதனைகளை எல்லாம் படு. இன்ப துன்பங்களை எல்லாம் அனுபவி. அதன் பிறகே துறவு வரும். அதன் பிறகே அமைதி வரும். எனவே பதவி, ஆசை, அது, இது என்று எல்லா ஆசைகளையும் பூர்த்தி செய்து கொள். அவை எல்லாம் மிகமிகச் சாதாரணமானவை என்பதை நீ புரிந்து கொள்ளும் காலம் அதன் பின்னர் வரும்.

இப்படி இந்த ஆசைகளை எல்லாம் நிறைவேற்றிக் கொள்ளாத வரையில், செயல் புரியும் நிலையைக் கடக்காத வரையில் அமைதி நிலையை, சாந்த நிலையை, சரணாகதி நிலையை அடைய முடியாது.

- சுவாமி விவேகானந்தர் -

பொற்காசுகளை மழையாகப் பொழிந்தாலும் ஆசைகள் அடங்காமல் பெருகும். ஆசைகளினை அப்படி அனுபவித்தால் அற்ப இன்பம் என்று, பின்விளைவு துக்கம் என்றும் அறிந்தவன் ஞானியாவான்.

- புத்தபிரான் -

உன் பணத்தை நேசிப்பவரை நேசிக்காதே. உன் மனத்தை நேசிப்பவரை நேசி. உனக்குப் பணமுள்ள பலபேர் தேவையில்லை. உனக்கு மனமுள்ள ஒருவர் போதும்.

## 15. அன்பு



இந்த உலகத்தில் அன்பு செலுத்துபவர்கள் யாரும் பிறருக்காக அன்பு செலுத்துவதில்லை. தனக்கு ஏதோ அதில் ஆனந்தம் கிடைக்கிறது. பிறருக்காக உயிரைத் தியாகம் பண்ணுகிறவன் கூட அந்தத் தியாகத்தினால் தனக்கு நிம்மதி கிடைக்கும் என்றுதான் செய்கிறான்.

- யாக்ஞவல்கியார் -

சின்னச்சின்ன அன்பில் தானே சொர்க்கம் இருக்கு.
அட பாசம் மட்டும் போதும் கண்ணே
காசு பணம் என்னத்திற்கு.

- வானொலியிலிருந்து -

அழகு என்பது மெழுகு போன்றது
அன்பு என்பது சுடரைப் போன்றது
அன்பு என்றும் மாறாதது.

- வானொலியிலிருந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு என்பது மதம், சாதி, அழகு, அறிவு, அந்தஸ்து, வயது பார்த்து வருவதல்ல. ஆத்ம திருப்தியால் வருவது. அதனால் தான் ஆன்மாக்கள் எல்லாம் அன்பையே விரும்புகின்றன. அது இறைவனிடம் மட்டுமே உண்டு. உன்னிடம் உண்டு என்றால் நீ இறைவன்.

இதை நீயே உன்னைக் கேட்டுப்பார்.

"அன்பு ஒரு வார்த்தையல்ல"

## 16. காதல்



காதலின் குணத்தைச் சொல்வது கடினம்
அனுபவம் ஒன்றே அறியக்கூடும்
உடலைப் பற்றிய உணர்ச்சியே அல்ல
அழகை மட்டும் ஆசிப்பதல்ல
நிறத்தைக் கருதி நிற்பதுமல்ல
அறிவை மெச்சி அடைவதுமல்ல
இளமையை எண்ணி இருப்பதுமில்லை
புகழோ இகழோ பொருட்படுத்தாது
இன்பமோ துன்பமோ இணைபிரியாது
அழுகின உடலையும் அணைத்து நிற்கும்
குற்றம் நேரினும் குறை சொல்லாது
ஒட்டி இருந்து உயிரையும் உதவும்
பற்றிய ஒன்றில் பற்று விடாது
தன்னை வெறுக்கினும் தான் வெறுக்காது
விரும்பிய பின்னர் விலக எண்ணாது

– நாமக்கல் கவிஞர் –

காதல் என்ற ஒன்று அது கடவுள் போல
உணரத்தானே முடியும் சொல்ல வார்த்தை இல்லை.

– வானொலியிலிருந்து –

காசால் பேசாதே கண்ணால் பேசு
காதல் வருமுன்னாலே காதலன்(லி) வருவான்(ள்) பின்னாலே.

பலமுறை வருவது தேர்தல்
ஒருமுறை வருவது காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வா என்றால் வருவதில்லைக் காதல்
தானாக வருவது தான் காதல்.

**- வானொலியிலிருந்து -**

ஒரு ராஜா ஒருநாள் ஊரைச்சுற்றிப் பார்க்கச் சென்றார். அவ்வாறு செல்கையில் ஒரு வீதியோரத்தில் நின்ற ஒருவனைப் பார்த்தவுடன் அவனைக் கொல்ல வேண்டும் போல மனதிற்குத் தோன்றியது. ஆனால் ஏன் என ராஜாவிற்கே புரியவில்லை. இதனை மந்திரியிடம் சொன்னார். அதற்கு மந்திரி ஒரு வாரத்திற்குப் பின் சொல்கிறேன் என்றார். ஒரு வாரத்திற்குப் பின் ராஜாவை மந்திரி கூட்டிக் கொண்டு அந்த நபரிடம் சென்றார். அப்போது ராஜா அவனைப் பார்த்த போது அவனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. அப்போது மந்திரி கூறினார் அன்றைக்கு அவன் நீங்கள் இறக்கவேண்டும் என்று எண்ணினான். இன்று அவன் அப்படி எண்ணவில்லை என்றார். ராஜா விளக்கமாகக் கேட்கும் போது நீங்கள் அவனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்ட பின்னர் நான் அவரை விசாரித்தபோது அவர் ஒரு சந்தனக்கட்டை வியாபாரி என்பதைப் புரிந்தேன். அவரிடமுள்ள சந்தனக்கட்டை அனைத்தையும் வாங்கிவிட்டுத்தான் உங்களை இங்கு கூட்டி வந்தேன். அவன் அன்று நீங்கள் இறந்தால் என் சந்தனக்கட்டை விற்பனையாகும் என எண்ணி நின்றபோதே நீங்கள் கண்டதால் அப்படி உங்களுக்கு அவனைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் வந்தது என்றார்.

**- திரு. சண்முகநாதனின் உரையிலிருந்து -**

மேற்கூறப்பட்ட கதை கூறவரும் கருத்து யாதெனில் ஒருவரை நமக்குப் பார்த்தவுடன் பிடித்துப்போவதும் வெறுத்துப் போவதும் நமது மன எண்ணங்களைப் பொறுத்தே ஆகும். இராமகிருஸ்ணரும் தனக்குரிய சீடனாக விவேகானந்தரைத் தேர்ந்தெடுத்தமையும் இதே போல் பார்த்தவுடன் மனதிற்குப் பிடித்தமையை அவர்களின் வரலாறு கூறுகின்றது. இது போலவே மன எண்ணங்கள் ஒருங்கிணையும் போது காதல் உண்டாகின்றது. இவை கண்ணுக்குத் தெரியாத அப்பாற்பட்ட மனோதத்துவ விடயம்.

8238 cc

## 17. திருமணம்

இராமகிருஸ்ணரும் சாரதாதேவியும் ஒருவரையொருவர் திருமணம் செய்து வாழ்ந்தனர். ஆனால் இருவரும் உடலாலும் இணையவில்லை, மனதாலும் இணையவில்லை. உற்றாருக்காகவும், ஊருக்காகவும் இணைந்த மாதிரி வாழ்ந்தனர். இருவரும் மனதில் இறைவனையே நினைத்து வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவள்ளுவருடையதும், ஔவையாருடையதும், சீதையினுடையதும், ஆண்டாளினுடையதும் தாய் தந்தை இணைந்து வாழ்ந்து திரிந்தனர். ஆனால் இவர்கள் தம் குழந்தைகளைப் பேணி வளர்க்கவில்லை. பெற்றவுடனேயே அந்த இடத்திலே குழந்தையை விட்டுச் சென்றவர்கள். இதுவும் திருமணவாழ்வுதான்.

சுந்தரமூர்த்திநாயனார் வரலாறே திருமணத்திற்கு முழு விளக்கமும் தருகின்றது. திருமணத்திற்கு இறைவனுடைய அனுசரணையும் கிடைத்தது.

**– பெரிய புராணத்திலிருந்து –**

ஆணோ, பெண்ணோ இருவரும் தம் ஆசைகள் பற்றுக்கள் யாவும் அடங்கி இறைவனை அடைவதை நோக்கமாகக் கொண்டு திருமணம் செய்தல் வேண்டும் என்பதையே மேலே கூறப்பட்ட ஆதாரங்கள் சான்று கூறும்.

ஒவ்வொரு ஆன்மாவும் தான் தன் ஆசைகள், பற்றுக்களை அனுபவித்து அவை யாவையும் கடந்து இறைவனை அடைய எண்ணும் போது உலகத்திலிருக்கும் தன் குழந்தையும், துணையும் பெரிதான விடயமல்ல. பேரின்பத்திற்காக சிறிய இன்பங்களை விட்டு விலத்திக் கொண்டவர்களே மேலே குறிப்பிட்டவர்கள்.

ஆன்ம இலட்சியம் ஈடேறுவதை நோக்கமாகக் கொண்டே முற்காலத்தில் பிரம்மச்சரியம், கிருகஸ்தம், வனப்பிரஸ்தம், சந்நியாசம் எனும் நான்கு படிநிலை குறிப்பிட்டுக் கிருகஸ்தம் என்பது திருமண வாழ்வுக் காலமாக குறிப்பிடப்பட்டமை இங்கு சுட்டிக்காட்ட முடிகிறது.

சுவாமி விவேகானந்தர் திருமணம் செய்யாமல் வாழ்ந்தவர். இவர் அனைத்துப் பெண்களையும் தாய் என்றே அழைத்தவர். இவர் இவ்வாறு ஒரே கண்ணோட்டத்தில் பார்த்தமைக்குக் காரணமும் உண்டு. உண்மையும் உண்டு.

ஒரு நாள் விநாயகர் பூனைக்குட்டியோடு ஓடிப்பிடித்து விளையாடும் போது தவறுதலாகப் பூனைக்குட்டியின் முகத்தில் நகக்கீறல் விழுந்துவிட்டது. பூனைக்குட்டி அழுதுகொண்டு ஓடிவிட்டது. விநாயகர் தன் தாயிடம் வந்தபோது தாயின் முகத்தில் நகக்கீறல் காணப்பட்டதைக் கண்டார். என்ன காயம் எனக் கேட்ட போது நீ தான் கீறிவிட்டாய் என்றார் உமாதேவி. அப்பொழுது தான் விநாயகர் உணர்ந்து கொண்டார் ஒவ்வொரு உயிரிலும் நீயே இருக்கிறாய். அதனாலே நான் ஒருவரையும் திருமணம் செய்ய மாட்டேன் என்று பிரமச்சரியராய் இருந்தவர்.

**– சஞ்சிகையிலிருந்து –**

நாம் நுணுக்கமாக சிந்தித்தோமானால் நம்மை நாமே பூச்சியநிலைக்குக் கொண்டு செல்வதே மேலான விடயம். அதுவே ஆன்ம ஈடேற்றம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. சீதனம்



பெண்ணைப் பெற்றவர்க்கு
ஆதங்கக் கண்ணீரையும்
ஆணைப் பெற்றவர்க்கு ஆனந்தக்
கண்ணீரையும் வரவழைக்கும்
அதிசய வெங்காயம் "சீதனம்"

- பத்திரிகையிலிருந்து -

ஆணைப் பெற்று
அருமையாய் ஆளாக்கி
காலம் வந்ததும்
திருமணச்சந்தையில்
ஏலம் போடும் அந்த
அருமை வியாபாரம் இது
காளையருக்குப் பெருமையாம்

சாண் பிள்ளை ஆனாலும்
ஆண் பிள்ளை வேண்டுமென்று
திருமணச் சந்தையிலே
விலை குறைத்தும் விற்கலாம் என்பதற்கோ?

சீதனம் வேண்டிச்
சீவியம் நடத்தாதே!
குணம் மிக்க மங்கையை - நீ
பணம் கேட்டு வருத்தாதே! அவள்
மனம் நோகச் சொல்லம்பு வீசாதே!
உரம் கொண்ட இறைதந்த - இரு
கரம் இருக்கு உழைப்பதற்கு - பின்
வரம் என்று கேட்பதேன் சீதனத்தை?

தடுக்கி நடப்பவர்க்கே
துடுக்கான தள்ளுவண்டி
மிடுக்கோடு நடப்பவர்க்கு
வேறெதற்கு தள்ளுவண்டில்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கெட்டப் போனவர்க்கே
கண் விளங்கக் கண்ணாடி
கண் விளங்குபவர்க்கு வேறெதற்குக் கண்ணாடி?

ஏற்காதே சீதனம் - அது
பகற்கொள்ளைச் சாதனம்.
ஏற்காதே சீதனம் - அது
உனக்கு பேரவமானம்.
தொகைப்பணமல்ல சீதனம்
உயர் குணம் தானடா சீதனம்.

ஆண்வீட்டார் கேட்டு வாங்குவதல்ல சீதனம்
பெண் வீட்டார் தம்மாலியன்றதைத் தன் பெண்ணுக்கு கொடுப்பதே சீதனம்
நல்ல பணச்சீதனம் பார்த்துப் பெண் தேடாதே.
நல்ல குணச்சீதனம் பார்த்துப் பெண் தேடு.
ஏனெனில் அதுவே
உனக்கும், உற்றாருக்கும் ஏன் ஊருக்கே நல்லது.

## 19. கணவன்

கணவன் மனைவியை ஏற்கும் போது கண்கலங்காமல் காப்பாற்றுவேன் என ஏற்று, அவளுக்குக் கடமையைச் செய்பவனாகத் தன் பொறுப்புக்களில் ஒரு கடமையைத் தானே ஏற்படுத்திக் கொள்கிறான்.

கண் கலங்காமல் காப்பாற்றுவேன் என்பது “வெங்காயம் கூட நானே உரித்துக் கொடுப்பேன்” என்றே மறைமுகமாகச் சத்தியம் செய்கின்றான். சத்தியம் செய்தபடி நடந்து கொண்டால் இன்பமுண்டு உனக்கு. தவறி நடந்தால் துன்பமுண்டு உனக்கு, உறவுக்கு, ஊருக்கு, உலகிற்கு.

மனைவியின் பிறந்தநாள் மற்றும் புதுவருடப்பிறப்புப் போன்ற நாட்களுக்கு உன்னால் இயன்றதை மறக்காமல் நினைவுபடுத்தி வாங்கிப் பரிசளித்தால் குடும்பத்தில் இன்பம் தானாக வரும். உனக்கும் இதே போல் நடக்கும்.

மனைவி உயிரோடு இருக்கும் வரை மனதில் அவள் நினைவு இருக்க வேண்டும். ஆனால் அவள் நினைவு மட்டும் இருக்கக்கூடாது.

“பெண் புத்தி பின் புத்தி” பின்னால் வரும் விளைவுகளை முன்கூட்டியே கூறக்கூடியவள் என்பதாகும். இது உன் மனதில் நினைவிருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் அரசனாகவும், மனைவி மந்திரியாகவும் இருக்கவேண்டும்.

மனைவியைத் தேர்ந்தெடுக்கும் போது மனைவி வறுமையை அறிந்தவளாய் இருக்கவேண்டும். தன்னை உணர்ந்தவளாய் இருக்கவேண்டும்.

## 20. மனைவி

மனைவிக்கு, "கணவனே கண் கண்ட தெய்வம்" கணவன் தெய்வமாக இல்லையேல் கொல்வது மேல்.

திருவள்ளுவர் வீட்டிற்கு வந்து தன் மனைவியான வாசுகியைக் கூப்பிட்டதும் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்கொண்டிருந்த வாசுகி அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்தாள். இது எதனைக் கூறுகின்றது எனில் மனைவி எப்போதும் கணவனையே நினைத்திருக்க வேண்டும் என்பதையே விளக்குகிறது.

கணவனைத் திருத்தி நல்ல படியாக வாழவைத்தால் அவன் தன்னை உணர்ந்தால் உன்னைத் தன் மனதில் நினைத்திருப்பான்.

பணம் எதிர்பார்க்கும் கணவனை விட
நல்ல குணம் எதிர்பார்க்கும் கணவனைக் கட்டு.

கணவன் கண்ணனாக இருந்தால் கும்பிடு.
கணவன் கம்ஷனாக இருந்தால் கொன்றுவிடு.

## 21. குரு

" கரு இல்லா முட்டையும் பாழ். குரு இல்லா வித்தையும் பாழ்"
மனிதனைக் கடவுள் நிலைக்குக் கொண்டு செல்பவரே குரு
படிக்கக்கூடியவருக்கு படிப்பிப்பவரல்ல குரு
படிக்கமுடியாதவனைப் படிக்க வைப்பவரே குரு
குருவாக ஏற்றுக் கொள்ள வயது பேதம் தேவையில்லை
குருவாக ஏற்றுக்கொள்ள குரு உயிரோடு இருக்கத் தேவையில்லை.

குரு ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம், இரண்டுமாயும் இருக்கலாம். ஆனால் குரு கரு உண்டாக்க நினைக்கக்கூடாது. குரு குருவை உண்டாக்க நினைக்கவேண்டும்.

குரு குருவாக இருந்தால் மதிக்கலாம்
குரு குருவாக இல்லாவிட்டால் மிதிக்கலாம்.
அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ்ஞானத்தைக் கொடுப்பவரே குரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. மனத்தால் வாழ்வது தான் வாழ்க்கை

சூரிய ஒளியை குவிவுவில்லை மூலம் பஞ்சின் மீது குவித்தால் பஞ்சு தீப்பற்றி எரியும். இதே போல் உன் மனதை ஓரிடத்தில் குவித்தால் கருங்கல்லையும் சிதறடிக்கலாம்.

நீ உடற்பயிற்சி செய்யும் போது அங்கே சக்தி வீணாக்கப்படுவதில்லை. சக்தி உனது உடலில் சேமிக்கப்படுகிறது. உன் உடல் உருவமைப்பு அழகாகின்றது. ஏனெனில் உனது மனம் உடலிலே குவிக்கப்படுவதால்.

கத்தி செய்யும் போது இரும்பு அடிப்பவன் தனது மனதைக் கத்தி மீது குவிப்பதால் கத்தி தான் உருவம் பெறுகிறது. அவனது உடலிலிருந்து சக்தி இழக்கப்படுகிறது. இவை இரண்டும் மனம் குவிகின்ற இடத்தில் பயன் உண்டு என்பதை விளக்குகின்றது.

**- மனோதத்துவத்திலிருந்து -**

ஒரு பிராமணருடைய வீட்டின் அருகே விபச்சாரி ஒருத்தி வசித்து வந்தாள். இதனைக் கண்ணுற்ற பிராமணர் ஒருநாள் அவளிடம் சென்று நீ செய்கின்ற தொழில் இறைவனுக்குத் துரோகமான செயல், நீ திருந்தி வாழ் என்று கூறிவிட்டு வந்தார். மீண்டும் அவள் அத்தொழிலைச் செய்து வருகின்றமையைக் கவனித்துக் கொண்டே அந்தப் பிராமணர் இருந்தார். ஆனால் விபச்சாரியோ அத்தொழிலை விடமுடியாமல் வயிற்றுப்பிழைப்புக்காகச் செய்துகொண்டு மனதிலே இறைவனை நினைத்து மனவேதனைப் பட்டுக்கொண்டிருந்தாள். இறுதியில் விபச்சாரி சொர்க்கம் சென்றாள். பிராமணர் நரகம் சென்றார்.

**- இராமகிருஸ்ணர் -**

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தம் மனதிற்குப் பிடித்தவரை விரும்பி விட்டு அயலாரின் வற்புறுத்தலுக்கு உட்பட்டு வேறு ஒருவரைத் திருமணம் முடித்து வாழ்ந்து வந்தால் அவர் திருமணம் முடித்தவரோடு வாழ்ந்தவரல்ல. ஏனெனில் அவர் மனம் மனதிற்குப் பிடித்தவரையே நினைத்திருக்கும். ஆகவே அவர் மனதிற்குப் பிடித்தவரோடே வாழ்ந்தவராகிறார்.

**- மனோதத்துவத்திலிருந்து -**

இராமகிருஸ்ணரும் தாய் தந்தையின் வற்புறுத்தலாலே சாரதாதேவியினைத் திருமணம் செய்து வாழ்ந்தவர். ஆனால் இருவரும் மனதில் இறைவனை நினைத்திருந்ததால் இறைவனோடு வாழ்ந்தவர்கள்ஆயினர்.

**- இராமகிருஸ்ணர் வரலாற்றிலிருந்து -**

பிறக்கும் போது வெறும் மனதோடு பிறக்கின்றோம். உலகத்தில் உள்ளவற்றைக் கண்டு, கேட்டு, உணர்ந்து நாமே நம் மனதில் பலவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகுத்திக் கொள்கின்றோம். உன் மனதை நீயே பூச்சியமாக வைத்திரு நீ இந்த உலகத்தில் உடலால் ஆற்றும் எந்தக் காரியமாயினும் உனக்குப் பலனளிப்பதில்லை. உன் மனம் ஆற்றும் காரியமே உனக்குப் பலனளிக்கும்.

நீ இறைவனைப் பிரிந்தோ, தாயைப் பிரிந்தோ, துணையைப் பிரிந்தோ, பிள்ளையைப் பிரிந்தோ, நண்பர்களைப் பிரிந்தோ இருப்பது உடலால்த் தான் இருக்கும். ஆனால் நீ எங்கிருந்தாலும் இவர்களை நினைத்தாயானால் நீ இவர்களோடே வாழ்ந்தவன் ஆகிறாய்.

ஆமையும், முயலும் ஓட்டப் பந்தயத்தில் போட்டி போட்டனர். முயலோ தான் வெற்றியின் இறுதிக் கோட்டிலே இருக்கிறேன் என தூங்கிவிட்டது. ஆனால் ஆமை அந்த வெற்றிக் கோட்டை நோக்கி நகர்ந்தது. வெற்றி பெற்றது. இதே போல் நீ உன் தாயையும், துணையையும், பிள்ளையையும், நண்பர்களையும் இவற்றைவிட மேலாக இறைவனையும் உடலால் அருகில் இருப்பதை விட மனதால் அருகில் இரு. வெற்றி உனக்கு நிச்சயம் வாழ்க்கையில் இன்பமும் உனக்குண்டு.

"இறைவனை நினைத்து உலகில் கடமைக்காக வாழும் போது நீ எதையும் செய்யலாம்" இது தான்

"வாழ்க்கையின் உண்மை நிலை"

## 23. திருந்து திருத்து

நீ முதலில் உன்னைத் திருத்திக் கொள்
சமுதாயம் தானாக திருந்தும்.

ஒரு நாள் ஒரு தாய் தன் மகனைக் கூட்டிக்கொண்டு மகாத்மாகாந்தியிடம் சென்று இவன் இனிப்பு இனிப்பாச் சாப்பிடுகிறான். இவனுக்கு புத்திமதி கூறி திருத்துங்கோ என்றாள். அதற்கு மகாத்மாகாந்தி நீங்கள் இவனை அடுத்த வாரம் கூட்டிக் கொண்டு வாங்கோ என்று அனுப்பிவிட்டார். அடுத்த வாரம் அவனை அத்தாய் கூட்டிவந்தார். அப்போது மகாத்மாகாந்தி "குழந்தாய் நீ இனிமேல் இனிப்புச் சாப்பிடுவதைக் குறைத்துக் கொள்" என்று கூறினார். அதற்கு அந்தத் தாய் இதை அன்றே கூறியிருக்கலாம் தானே என்றார். அதற்கு மகாத்மாகாந்தி நானே இனிப்பு இனிப்பாச் சாப்பிட்டுக்கொண்டிருந்தேன். நீங்கள் வந்து கேட்டபோது நான் எப்படி இவனுக்குப் புத்திமதி கூறுவது. அதுதான் நான் இப்போது திருந்திவிட்டேன் என்றார்.

- மகாத்மாகாந்தி வரலாற்றிலிருந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் முறையால் திருத்தாதே
சமயோசித அறிவால் திருத்து.
ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தையும் காட்டு

- இயேசு -

இரு இருக்கைகளில் நீங்கள் இருவர் உட்கார்ந்து இருக்கும் போது இன்னொருவர் வந்து உங்கள் இருவரையும் எதிர்த்து அந்த இடத்தில் ஒன்றைத் தருமாறு கேட்டால் நீங்கள் இருவரும் தன்மையாக எழுந்து அவ்விடத்தை விட்டுச் சென்றால் அதுவே அவருக்கு நீங்கள் இருவரும் சேர்ந்து அறைந்த பெரிய அறை ஆகும்.

## 24. நீ உனக்காக வாழ்

நீ யாருக்காகவும் வாழாதே.
நீ உனக்காக வாழ்.
நீ உன் ஆத்ம திருப்திக்காக வாழ்.

ஆடு குட்டி போடவில்லை, மாடு குட்டி போடவில்லை என்று கவலைப்படுகிற நீ,

நாய் குட்டி போட்டால், பூனை குட்டி போட்டால் சந்தோசப்படுவதில்லை. ஏனெனில் நீ எதிர்பார்ப்பது கிடைப்பதில்லை. எதிர்பார்க்காதது கிடைக்கிறது.

எதிர்பாராமல் கடமைச் செய் சந்தோஷம் இருக்கும்.
உன் மனதில் உனக்குள்ளே இன்பம் இருப்பது விளங்கும்
நீ ஒவ்வொரு நாளும் குளிக்கலாம் ஆனால்
நீ ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு உடை உடுத்தாதே. ஏனெனில்
நீ மற்றவர்களுக்காக வாழ்கிறாய் என்பதையே அது காட்டுகிறது.

- நற்சிந்தனையிலிருந்து -

நீ மற்றவருக்காக வாழ்ந்தால்
நீ ஒரு போதும் சந்தோஷத்தைக் காணமாட்டாய்.

## 25. உறவுகள்

நண்பர்களே!

மனித உறவுகள் மெலிதானவை, நுட்பமானவை, யார் யாருக்கு அன்பு காட்ட முடியுமோ, நல்ல வார்த்தை சொல்ல முடியுமோ, உதவ முடியுமோ அதை இருக்கும் போதே, முடியும் போதே செய்து விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உறவுகள் நிலையற்றவை. எந்த நேரத்திலும் மறைந்து போகலாம். பிரிந்து போகலாம். இருக்கிற நிமிடம் மெய் அந்த நிமிடத்திலே அந்தக் கணத்திலே உதவுங்கள். உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## 26. உதவுவதில் இன்பமுண்டு

உதவுவதில் இன்பமுண்டு.
உறவுகளில் இன்பமுண்டு.
பகிர்ந்து கொள்வதில் இன்பமுண்டு.
ஆதரவு கொடுப்பதில் இன்பமுண்டு.
அரவணைப்பில் இன்பமுண்டு.
அநாதையோடு வாழ்வதில் இன்பமுண்டு.
அனைவரிடமும் இன்பமுண்டு.
அனைத்திலும் இன்பமுண்டு.
அறிந்தவர் வாழ்வில் இன்பமுண்டு.

குஷேலர் வறுமையில் இருக்கும் போது ஒருநாள் சிறிது அவல் தயாரித்து அதைக் கொண்டு கண்ணனிடம் சென்றார். கண்ணனும் அதை அன்போடு வாங்கி அதனைச் சிறிது சிறிதாக எடுத்து வாயில் போட்டுச் சிரிச்சுச் சிரிச்சுச் சாப்பிட்டுக் கொண்டிருக்க குஷேலரின் வீட்டில் செல்வங்கள் பெருகினவாம்.

– புராணக்கதையிலிருந்து –

கொடுக்கின்ற அளவு பெரிதல்ல
கொடுக்கின்ற இடம் பெரிதல்ல
கொடுக்கின்ற நேரம் பெரிதல்ல
கொடுக்கின்ற மனம் தான் பெரிது.

"எள் என்றாலும் ஏழாய்ப் பங்கிடாதே ஆறாய்ப் பங்கிடு"
ஏனெனில் உனக்கு வேண்டாம் ஏனெனில்
அதிலும் இன்பமுண்டு.

## 27. அநாதைகளின் வாழ்வு?

தாய் இல்லை, உறவுகள் இல்லை, சொத்து என சொல்லிக் கொள்ள ஒன்றுமில்லை, தான் யார் எனத் தெரியாமல் ஏங்கிக் கொண்டு ஆச்சிரமங்களில் வாழும் மனித உருவம் கொண்டவர்களே அநாதைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறானவர்களுக்கும் தாய், உறவுகள், சொத்துக்கள், இன்பமான வாழ்வு என்பவற்றை உருவாக்குகின்ற கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

நாம் பேரூந்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் போது குழந்தையுடன் தாய், கர்ப்பிணிப்பெண் அல்லது வயது முதிர்ந்தவர் அல்லது நோயாளி என்போரும் பயணம் செய்ய பேரூந்தில் ஏறும் போது நாம் எமது இருக்கையை அவர்களுக்குக் கொடுத்து உதவுகின்றோம். அல்லது அவர்களுடைய குழந்தையை, அல்லது அவர்கள் வைத்திருக்கும் பொருட்களை நாம் வாங்கி வைத்திருந்து அவர்களுக்கு உதவுகின்றோம். அவர்களுடைய கஷ்டங்களையும் நாம் தாங்கிக் கொள்கின்றோம். அதிலும் ஒரு இன்பம் இருக்கத்தானே செய்கிறது. இதில் ஒரு எதிர்பார்ப்போ, சுயநலமோ இல்லையே. அது போல நாம் அனைவரும் இவ்வுலகில் சக பிரயாணிகள். அனுசரித்து, அரவணைத்து வாழவேண்டும்.

ஒரு நாள் அறிஞர் அண்ணாவும், அவரது மனைவியும் காரில் சென்று கொண்டிருக்கும் போது ஓர் வீதியோரமாக காரை அண்ணா நிறுத்திவிட்டு இறங்கி வீதியோரத்தில் மோர் விற்றவனிடம் மோர் வாங்கிக் குடித்தார். காரில் ஏறி அண்ணா செல்லும் போது மனைவி கேட்டார் காரில் செல்கின்ற நாங்கள் கோட்டலில் அல்லவா ஏதாவது குடிக்க வேண்டும். நீங்கள் இப்படி வீதியோரத்தில் மோர் குடித்துவிட்டு வருகிறீர்களே ஏன்? என்று கேட்டார். கோட்டல் நடத்துபவன் வாழ வழி தெரிந்தவன். வாடிக்கையாளர்கள் உள்ளவன். ஆனால் இவனுக்கோ அவ்வாறு இல்லை. தான் களவு எடுக்காது தன்னால் இயன்ற தொழில் செய்து முன்னேற நினைக்கிறான். அவனுக்கு நாங்கள் அனுசரணை செய்யவேண்டும். அவன் முன்னேற வழி செய்யவேண்டும். அதனால்த்தான் நான் அப்படிச் செய்தேன் என்றார் அறிஞர் அண்ணா.

**- அறிஞர் அண்ணா வரலாற்றிலிருந்து -**

அநாதை என்ற நிலை உனக்கு வந்தால் நீ எப்படி இருப்பாயோ அதே போல் அநாதை என்ற நிலையில் இருப்பவரையும் நீ ஒருகணம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

அநாதைகள் என்ற சொல் ஒழிக்கப்படவேண்டும்
அனைவரும் அதற்கு முன் வரவேண்டும்.
வாழ வழி தெரிந்தவர்களை வாழ வைப்பதல்ல வாழ்க்கை.
வாழ வழி தெரியாதவர்களை வாழ வைப்பதுதான் வாழ்க்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. விதவை

கணவனை இழந்தவளே விதவை. அவளும் வாழ வேண்டியவள். அனைவராலும் பாதுகாக்கப்பட வேண்டியவள். சகல விடயங்களிலும் பங்கு பற்ற வேண்டியவள். சகல சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் முன்னிற்க வேண்டியவள். அனைத்துப் பெண்கள் போல சமமாய் மதிக்கப்பட வேண்டியவள்.

கணவனை இழந்தவள் மன வேதனையிலும், மனவிரக்தியிலும், வாழ்வின் நிலையாமையையும் நினைத்துக் கொண்டிருக்கும் நேரத்தில் அவள் முன் எந்தக் காரியம் செய்தாலும் அல்லது நீ அவளை எந்தக் காரியத்திலும் ஈடுபடுத்தினாலும் அது சரிவர நிறைவேறாமல் தடங்கும். ஏனெனில் நீ நினைப்பது வேறு, அவள் நினைப்பது வேறு. இரண்டு வெவ்வேறு சிந்தனைகள் ஒன்றாகச் செயற்பட முடியாது. மேலும் அவளை எல்லோரும் விலத்தி வைக்கும் போது அவள் மேலும் விரக்தி நிலைக்கும், மனவேதனையுமே அடைகின்றாள்.

அவளைச் சூழ உறவினர்களும், நண்பர்களும், அயலாரும் சேர்ந்து இருப்பதும் அவளையும் தம்மில் ஒருவராக நினைத்துச் சமமாக மதித்து உறவாடும் போது அவள் விரக்தியிலிருந்து விடுபடுகின்றாள். மனவேதனையிலிருந்து சுமூகமான வாழ்க்கை நிலைக்குத் திரும்புகிறாள். எல்லோரும் அவளோடு உரையாடும் போது, பழகும் போது அவள் தான் தனிமையில் இருப்பதாக நினைக்கவில்லை. தன்னைச் சூழ ஒரு சமூகமே இருக்கிறது என சந்தோஷப்படுகிறாள். அவள் முகத்திலும் சந்தோஷம் வெளிப்படும். காரியமும் நல்லபடியாக நிறைவேறும். இது தான் உண்மை.

- மனோதத்துவத்திலிருந்து -

மூடக்கொள்கை யாவும் மனிதனின் அறியாமை. விதவைகள் வாழ வேண்டியவர்கள். விதவைகள் வாழ வைக்கப்பட வேண்டியவர்கள்.

# 29. ஊனம்

ஊனம் ஊனம் ஊனம் இங்கு ஊனம் யாருங்க
உடம்பில் உள்ள குறைகளெல்லாம் ஊனம் இல்லிங்க
உள்ளம் நல்லா இருந்தா ஊனம் ஒரு குறையில்லை
உள்ளம் ஊனப்பட்டா உடம்பிருந்தும் பயனில்லை
இரண்டு காலு உள்ளவனும் கெடுகிறான்
சிலர் ஒற்றைக்காலில் நல்லவழி நடக்கிறான்.
ஊனம் என்னடா ஊனம் அந்த ஞானம் தானே வேணும்
அந்த ஞானம் வரவேணுமுன்ன மனசு மாற வேணும்.

- வானொலியிலிருந்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் பார்க்க முடியாமல் இருப்பவன், காதால் கேட்கமுடியாமல் இருப்பவன், வாயால் பேசமுடியாமல் இருப்பவன், காலால் நடக்க முடியாமல் இருப்பவன் போன்றோரை நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஏனெனில் அவனிடம் உன்னைவிட மேலான திறமை ஏதாவது ஒன்று இருப்பதை நீ அறிவாய்.

## 30. மன நோயாளி

மனிதனாகப் பிறந்து வளர்ந்து வருகின்ற போது மனமென்ற ஒன்று இருக்கும் போது பாதிப்பு ஏற்படுவதால் உண்டாவதே மனநோய். ஆனால் பிறந்ததிலிருந்தோ அல்லது வளர்ந்த நிலையிலோ மூளையில் ஏற்படும் பாதிப்புக்களால் ஏற்படுவது சித்த சுவாதீனநோய். இரண்டும் ஒரே மாதிரியாகத்தான் தோன்றும். ஆனால் இரண்டும் வெவ்வேறு.

அறிவும், மனமும் ஒன்றில் ஒன்று தங்கியுள்ளது. அறிவும், மனமும் நல்ல நிலையில் இருந்தால் நல்ல மனிதனாக வாழ முடிகிறது. அறிவு நல்ல நிலையில் இருந்தால் மனதை நல்ல வழியில் செயற்படுத்த முடியும். மனம் நல்ல நிலையில் நல்ல அறிவு சேர்க்கப்படுகிறது. சித்த சுவாதீன நோயினை குணப்படுத்துவது கடினம். இந்த ஆய்விலே மூளையை மாற்றுகின்ற ஆராய்ச்சிகள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்ற போதும் பலன் கிடைக்கவில்லை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மனநோயினை மாற்ற முடியும். மனம் உடலில் எந்தப் பகுதியில் இருக்கிறது எனக் கூறமுடியாது. எனினும் இதனை ஆய்வு செய்ய முடிவதோடு உரிய பலனும் கிடைத்துள்ளது.

அந்தக் காலத்தில் அதிர்ச்சியின் மூலம் மனநோயைக் குணப்படுத்த முடியும் என்று நம்பினார்கள். சிலரைப் பலமாக அடிப்பார்கள், அருவிகளில் நிறுத்தி அறுபது அடி உயரத்திலிருந்து தள்ளி விட்டுவிடுவார்கள். இவ்வாறு அதிர்ச்சி மூலம் இந்த நோயினைக் குணப்படுத்துவார்கள்.

எப்படிப்பட்ட சிகிச்சை கொடுத்தாலும் அவர்களுக்கு அன்பு வேண்டும். அவர்களின் திறமைகளைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும். தாழ்வு மனப்பான்மையை முக்கியமாகப் போக்கவேண்டும்.

ஏற்கனவே மனநிலை பாதிக்கப்பட்டவரைத் திரும்பவும் கட்டி வைத்துச் சங்கிலி போட்டுச் சித்திரவதைப்படுத்துவது என்ன நியாயம்? என்னதான் இருந்தாலும் அந்த நபருக்கென்று தன்மானம், சுயமரியாதை உண்டு என்பதை யாரும் மறந்து விடக்கூடாது. அதைப்புரிந்து கொண்டு நடந்தால் கண்டிப்பாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணப்படுத்த முடியும். குணமாகி வருகிறவர்களையும் சரிவரப் புரிந்து கொண்டு அவர்களுக்கு வேலை கொடுப்பது முக்கியம்.

தியானம் மூலமும் இந்நோயினைக் குணப்படுத்த முடியும். நோயினைக் குணப்படுத்துவதோடு மனித வாழ்க்கையின் பயனையும் அடைய முடிகிறது. மனதில் இறைவனை நினைத்து இறுதியில் உடலிலிருந்து மனம் காணாமல் போவது தான் அந்நிலை. திருடனாக இருந்த வான்மீகி தியானம் மூலம் தன் உடலினைக் கறையான் புற்று மூடியிருந்ததையும் அறியாமல் இருந்தமை, புத்தர் அரசமரத்தின் கீழ் ஞானநிலையில் இருந்தமை யாவும் மனம் காணாமல் போகச் செய்யும் செயற்பாடுகளே. அந்நிலையில் பேரானந்தமே கிடைக்கும்.

வெறும் மனதோடு பிறக்கின்ற மனிதன் இறக்கின்ற போதும்
வெறும் மனதோடு இறக்க வேண்டும்
இதுதான் வாழ்க்கையின் உண்மை நிலை.

## 31. குற்றவாளி

மனிதன் தவறுகள் செய்யலாம் ஆனால் தப்புக்கள் செய்யக்கூடாது
தவறு செய்தவன் திருந்தப் பார்க்கணும்
தப்பு செய்தவன் வருந்தியாகனும்.

**- வானொலியிலிருந்து -**

குற்றம் புரிந்தவனுக்கு இவ்வுலகில் தண்டனை வழங்குவது அவன் திருந்தி வாழ்வதற்கே. மரணதண்டனை வழங்குவது அவன் மறுபிறப்பு எடுத்து வாழ்வதற்கே.

குற்றவாளிதான் என இவ்வுலகில் ஒருவராலும் நிரூபிக்க முடியாது. ஏனெனில்

கண்ணால் காண்பதும் பொய்
காதால் கேட்பதும் பொய்
தீர விசாரிப்பதும் பொய்யையும் தரும்.
மனதில் குற்றவுணர்வு உள்ளவனே குற்றவாளி.

## 32. அழகு

கண்ணால் காண்பது மட்டும்தான் அழகல்ல
கண்டதும் மயங்க வைப்பதுதான் அழகல்ல
கடைசிவரை உன்னோடு இருப்பதும்
கட்டையில் போகும் வரை இருப்பதுமே அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு தான் அழகு
அறிவு தான் அழகு
அடக்கம் தான் அழகு
அமைதி தான் அழகு
இந்த அழகுதான் ஆதி தொடக்கம் அந்தம் வரை
ஆனந்தம் தரும் அழகு

இந்த அழகைக் கண்டால் அதை அடைய ஆசைப்படு
அடைய முடியாவிட்டால் ஆதங்கப்படு இந்த அழகையே
நீ வளர்க்க ஆசைப்படு.

## 33. குணம்

மனிதன் வாழும் சூழ்நிலையும், அவன் பழகும் மனிதர்களும், இயற்கை நிகழ்வுகளும், அவன் உண்ணும் உணவுகளும் தான் அவனது குணத்தை தீர்மானிக்கின்றன.

வாழும் சூழ்நிலையில் காணப்படுகின்ற சம்பவங்களும், காட்சிகளும் அவன் மனதில் பதிவதால் அவன் அதனை ஏற்று வாழ்கிறான். அல்லது எதிர்த்து வாழ்கிறான்.

மனிதன் பழகும் நண்பர்களும், சேரும் மனிதர்களும் இவனை தம்போல் உருவாக்குகின்றமையும், இவன் அவர்களாக மாறுவதாலும் இவனது குணம் உருவாகின்றது.

பன்றியோடு சேர்ந்த பசுவும் பௌரி தின்னும்

– ஆசிரியரிடமிருந்து –

மனிதன் உண்ணும் உணவின் தன்மையும் அவனது குணத்திற்கு அடிப்படைக் காரணமாக அமைகின்றது.

மனிதன் மாமிசம், புலால், மது ஆகியவற்றை உண்ணக் கூடாது என்று கூறப்படுவது மனிதனின் குணத்தைத் தவறான பாதையில் கொண்டு செல்லும் என்பதற்காகவே.

மது அருந்துபவன் தன் மதி மயங்கி தான் என்ன செய்கிறேன் என்பதைக் கூட மறக்கிறான். தன்னையும் யார் என்பதையும் மறக்கிறான். அதனாலே மதுபானம், அருந்தும் பானத்திலிருந்து விலக்கப்பட்டது. உடலின் மருத்துவ தேவைக்காக மருந்து என்ற நிலையில் பாவிக்கப்படுவது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

மாமிசம், புலால் என்பவற்றை உண்பவர்கள் மனிதர்கள் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருந்து ஒருபடி கீழ் இறங்கியவர்கள் ஆகின்றனர். ஏனெனில் ஒரு மிருகத்தையோ, ஒரு பறவையையோ அல்லது நீரில் வசிக்கும் விலங்குகளையோ கொன்று அதன் உடலை புசிப்பவர்கள் அவ்வாறு மிருகத்தையோ, பறவையையோ அல்லது நீர் வாழ் விலங்குகளையோ கண்டால் அதன் மீது அன்பு, இரக்கம், பிற உயிரை நேசிக்கின்ற பண்பு யாவையும் கடந்து அதனைக் கொன்று தன் உணவுப் பசியைப் போக்கவே நினைப்பார்கள். அம்முயற்சியிலே ஈடுபடுவார்கள். இவ்வாறு சிறுசிறு உயிரினங்களை அழிக்க முற்படுவோர் தம்மோடு கூட இருக்கும் மனிதரையும் கொலை செய்யத் துணிந்து விடுவர். அது அவர்க்குச் சாதாரண விடயமாகக் காணப்படும். "சிறுதுளி பெருவெள்ளம்" என்ற பழமொழி போல் இவை பாரிய விளைவை ஏற்படுத்தும் என்பதற்காகவே மச்ச உணவு தவிர்க்கப்பட வேண்டும் என கூறப்படுகிறது.

தாவர உணவுகளிலும் சில உணவுகளும் தவிர்க்கப்படவேண்டும். அல்லது குறைக்கப்பட வேண்டும். அவை காமஉணர்வுகளுக்கு அடிப்படையாக அமைகின்ற உணவுகள் என கூறப்படுகின்ற உணவுகள்.

மனிதனின் குணத்திற்குக் காரணமாக இயற்கை நிகழ்வுகளும், கோள்களின் நிலையும் காரணம் எனக் கூறப்படுகின்றது. கோள்கள் சுற்றும் சுழற்சியும் மனிதனின் குணத்தை மாற்றுகின்றன. அல்லது தீர்மானிக்கின்றன. இதனை மாற்றுவது கடினம். அனுசரித்தே நடக்கவேண்டும். இயற்கை நிகழ்வுகள் என்ற வகையில் பெண்கள் மாதவிடாய்க் காலத்தில் சற்று தம் குணத்தில் மாறுபாடு உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். இது அவர்களின் மனவிரக்தி, தாம் விலக்கி வைக்கப்பட்டுள்ளதாய் எண்ணுகின்ற மனப்பான்மை போன்றவற்றால் கோபப்படுபவர்களாய், ஒரு காரியத்தில் ஊக்கம் இல்லாதவர்களாய் இருப்பார்கள். இவை இயற்கை நிகழ்வினால் ஏற்படுகின்ற குண அம்சங்கள். இவ்வாறான காலப்பகுதியில் பிறர் இதனை அனுசரித்து நடப்பதனால் பிரச்சனை உருவாகாமல் வாழ முடியும்.

– மனோதத்துவத்திலிருந்து –

ஆகவே ஒருவரின் குணத்தைத் தீர்மானிப்பது பல அம்சங்கள். இவை ஒழுங்கான முறையில் கடைப்பிடிக்கப்பட்டால் அனுசரித்து நடந்தால் வாழ்வில் வெற்றி நிச்சயம். வாழ்வில் இன்பமுண்டு உனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34. பயனுள்ள வாழ்க்கை

இடுக்கண் வருங்கால் நடுக்கம் அடையாதீர்
தெய்வத்தைப் போற்றுவீர் ஞானிகளை மதிப்பீர்
பொய்பேசுவதைத் தவிர்ப்பீர். புறங்கூறுதல் ஒழிப்பீர்
ஊண் உணவு ஒழிப்பீர். பொய்ச் சான்று கூறாதீர்.
பிறர்மனதை நயக்காதீர். உயிர்களுக்கு ஊறு செய்யாதீர்
மெய்மை விட்டு அகலாதீர். தானம் பல செய்க.
தீயார் நட்பு இகழ்ச்சி அறவோரை அணுகுக.
ஒழுக்கம் ஓம்புக.
கள், காமம், கொலை, களவு இவற்றை நீக்கி வாழ்க.
இளமையும், யாக்கையும், செல்வமும் நில்லா
உள்ள நாட்களில் உறுதிகளைத் தேடுக.
இதுவே வீட்டு நெறி. பயனுள்ள வாழ்க்கை

**- சிலப்பதிகாரத்திலிருந்து -**

மனித வாழ்க்கை முத்தரப்பட்டது. உடல்வாழ்க்கை, அறிவுவாழ்க்கை, ஆன்மீகவாழ்க்கை என்பனவாகும்.

உண்ணல், உடுத்தல், உழைத்தல், உறங்குதல் என்பன உடல் வாழ்க்கையாகும்.

படித்தல், எழுதல், சிந்தித்தல், ஆய்வு செய்தல் முதலியன அறிவு வாழ்க்கையாகும்.

நன்மையை நாடுதல், தீமையை விலக்குதல், உண்மை, நேர்மை, நீதி, தூய்மை முதலிய புனித செயல்களைத் தேடி வாழ்தல் ஆன்மீக வாழ்க்கையாகும்.

ஆன்மீக வாழ்வில் எவ்வித இடையூறுகள் குறுக்கிட்டாலும் அவற்றைப் பொருட்படுத்தாது நெறி பிறழாது வாழ வேண்டும். அதுவே உண்மையான ஆன்மீக வாழ்க்கையாகும்.

**- சத்திய சாய்பாபா -**

உண்மையான ஆன்மீக வாழ்வு என்றால் தன்னிடமுள்ள விலங்குத்தன்மையைக் கொல்லவேண்டும். மனிதத்தன்மையை வளர்க்க வேண்டும். இவை மூலம் தெய்வத்தன்மைக்கு இட்டுச்செல்ல வேண்டும்.

நாம் கடவுளின் பிள்ளைகள்
நாம் கடவுளை அடைய வேண்டும்.
கடவுள் தான் அன்பானவர்.
கடவுள் தான் சுயநலமற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ துன்ப இன்பத்தை அனுபவித்து
இறுதியில் இவற்றை விட
பேரின்பம் ஒன்று உண்டு என உணர்ந்து
என்னிடம் வரவேண்டும் என்பதே
கடவுளின் குணம்.
அட அவனுக்குத்தான் தெரியும்
அதன் ஆரம்பமும் முடிவும்.
கடை யாருக்கம்மா புரியும்.

**- வானொலியிலிருந்து -**

எவ்வளவு நீண்ட வாழ்க்கைப் பயணமாக இருந்தாலும் சரி அல்லது சிக்கலான பயணமாக இருந்தாலும் சரி ஓர் அடி எடுத்து வைத்துக் கிளம்பிய பின்புதான் பயணமே தொடங்குகிறது. அந்த முதலடிக்குப் பெயர்தான் அர்ப்பணித்துக் கொள்ளல்.

**- வெற்றி பெறுங்களேன் நூலிலிருந்து -**

கோழியைப் பாரு காலையில் விழிக்கும்
குருவியைப் பாரு சோம்பலைப் பழிக்கும்
காக்கையைப் பாரு கூடிப் பிழைக்கும்
நம்மையும் பாரு நாடே சிரிக்கும்
உனக்கொரு கொள்கை
உனக்கொரு தலைவன்
உனக்கொரு பாதை
உனக்கொரு பயணம்
தொடங்கிடு தம்பி
இறைவனை நம்பி.

**- வானொலியிலிருந்து -**

## 35. ஆன்மீகம்

உயிர், உடல், உலகம், கடவுள், பாபம், மறுபிறப்பு போன்றவற்றை சிந்தித்து வாழ்பவர்கள் ஆன்மீகத் தொடர்புடையவர்கள் ஆவர்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஆன்மீகத் தொடர்பு உள்ளவராக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அவன் மனித வாழ்க்கை வாழ்பவன் அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மதமாக இருக்கலாம். எந்த இனமாக இருக்கலாம். அவரவர் தன்னை அறிந்து கொள்ளவேண்டும். அதற்கு ஆன்மீகத் தொடர்பு வேண்டும்.

ஆன்மீகம் என்பது இந்து மதத்தவர்க்கு மட்டும் உரியதல்ல.

## 36. நான்

எனக்கு எல்லாம் தெரியும்!
நான் பணக்காரன்
நான் அழகானவன்
என் குடும்ப பாரம்பரியம் புகழ் பெற்றது
நான் மிகவும் படித்தவன்
என்னைவிட புத்திசாலி யாருமில்லை
என்னை எல்லோரும் மதிக்க வேண்டும்
இப்படி வரிக்கு வரி "நான்" போடும்
மனிதர்கள் ஏராளம்
"நான்" ஒழிய வேண்டும்
"யாம்" மலர வேண்டும்.

**- வெற்றி பெறுங்களேன் நூலிலிருந்து -**

## 37. நிலையாமை

உலகில் பௌதீக வாழ்க்கை நிலையற்றது. இளமை உலகியலான செல்வங்கள் எல்லாம் நகர்ந்து செல்லும் மேகங்களைப் போன்றவை. கண நேரத்தில் மறைந்து விடும். கணவன், மனைவி, பிள்ளைகள், பந்துக்கள் இவர்களும் கூட மூடுபனிபோல் சட்டென்று மறைந்து விடக்கூடியவர்கள்.

**- சத்திய சாயிபாபா -**

மனிதன் பசிக்குக் கோழி இரை
கோழியின் பசிக்குப் புழு இரை
புழுவின் பசிக்கு மண் இரை
மண்ணின் பசிக்கு மனிதன் இரை
மண்ணில் வந்து மண்ணில் மறையும்
மனதுக்குத் தெரிவதில்லை.

**- வானொலியிலிருந்து -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தமாக இருங்கள், அனுபவியுங்கள் ஆனால்
கொஞ்சம் மறுமையை எண்ணிப் பாருங்கள்
உங்கள் முடிவு என்ன? உங்களுக்கு ஏற்படப் போகும் நிலை என்ன?
நீங்கள் போக வேண்டிய இடம் எது?
நீங்கள் ஏன் உலகத்திற்கு வந்தீர்கள்?
உனக்கும் உலகத்திற்கும் என்ன தொடர்பு?

– ஓஷோ –

மனிதன் எதை வேண்டுமாயினும் உணரட்டும், உணராது இருக்கட்டும், நினைவிருக்கட்டும், மறக்கட்டும். ஆனால் அவன் நிலையாமையை உணர்ந்தே ஆகவேண்டும்.

இங்கே இருப்பது சிலகாலம் அதற்குள் ஏனோ அகம் பாவம்
இதனால் உண்டோ ஒருலாபம் எண்ணிப்பாரு தெளிவாகும்.

– வானொலியிலிருந்து –

எமது இந்தப் பிறவி நிலையில்லாதது. எந்த நேரத்தில் அழிவுபடுமோ எமக்குத் தெரியாது. நேற்று எம்முடன் இருந்து எல்லா விதமான களியாட்டங்களிலும், துன்ப நிகழ்வுகளிலும் பங்கு கொண்டவர், இன்று அவரில்லை. நம்பமுடிகிறதா? நம்பத்தான் வேண்டும். நம்பித்தான் ஆகவேண்டும். மனிதப்பிறவியின் நிலை அத்தகையது. எப்படியோ நாம் பிறந்து விட்டோம். நாம் இங்கு இருக்கக்கூடிய கால எல்லை எமக்குத் தெரியாது ஆனால் சிந்திக்கவல்லது இப்பிறவி.

சொத்துபத்து சேர்த்தவனும் புகையத்தான் போகிறான்.
சோகத்தில் சிரிப்பவனும் புகையத்தான் போகிறான்.

– வானொலியிலிருந்து –

தாமரை இலையில் நீர் போல் நீ
ஒட்டி ஒட்டாமல் இரு

– வானொலியிலிருந்து –

உலகத்தில் உள்ளவற்றை அனுபவி. ஆனால் பற்றுவைக்காதே. எந்த நிலையிலும் விட்டு விலகத் தயாராக இரு.

## 38. இது தான் மாயை

உள்ளங்கையில் நெல்லிக்கனி இருக்கின்றது. ஆனால் நீ அதனைக் காணாது வெளியில் தேடுகிறாய்.

இருட்டில் ஒரு கயிற்றுத்துண்டு கிடக்கும் போது நீ அதனைப் பாம்பு என்று நினைக்கிறாய். அதனை உணர்ந்து கொள்வதற்கு வெளிச்சத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துப் பார்ப்பது போல் மாயை உணர்ந்து கொள்வதற்கு நீ அறிவென்ற விளக்கைப் பிடித்துப் பார்க்க வேண்டும்.

வெளிச்சம் இல்லாத வரையில் நீ உன் மனதில் பாம்பு என்றே நினைத்துக் கொண்டு பயந்து பயந்து இருக்கின்றாய். துன்பம் உனக்குத்தான். இன்பம் உனக்குள்ளே இருக்கின்றது. அதனை நிரந்தரமாக ஆக்குவதற்கு உலகினைப் புரிந்து கொள்ள வேண்டும். உன்னை அறிந்து கொள்ள வேண்டும். நீ மதிமயங்கி இந்த உலகத்தின் மாயையில் அமிழ்ந்து விட்டாய் அதிலிருந்து நீங்குவதற்கு நீ விழிப்படைய வேண்டும்.

**- சங்கரரிடமிருந்து -**

நீ கனவு காண்கிறாய். கனவு காணும் வரையில் அது நியமாகத் தான் தோன்றும். கனவு கலைந்தபின் நீயே உணர்ந்து கொள்கிறாய் இது கனவுதான் என்று. அது போலே நீ இந்த உலகச் செயற்பாடுகளில் பிறந்ததிலிருந்து இன்றுவரை இயங்கிக் கொண்டிருப்பது நியமானவை அல்ல. உண்மை நிலை வேறு. அதனை நீ தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒருவன் சிறுவயதிலிருந்து பாவித்து வரும் அம்மிக்கல் அவன் வயது முதிர்ந்து இறக்கும் போது அம்மிக்கல் அரைவாசியாகப் போகின்றது எனின்அவன் அம்மிக்கல்லையே உண்டிருக்கிறான் என்பது தானே உண்மை. ஆனால் அது அவனுக்கே தெரியாமல் அவனது உணவோடு சென்று உடலில் கலந்து விட்டது. இதுபோலே மாயையும் உன் மனதில் கலந்து இருக்கிறது. அதனை இறுதியில் உணராமல் முதலிலே உணர வேண்டும்.

**- புத்தரிடமிருந்து -**

அசோகமன்னன் கலிங்கத்தில் பாரிய போர் நிகழ்த்திப் பெரும் உயிர்ப் பலிகளை ஏற்படுத்தி பின்பே தன்னை உணர்ந்து கொண்டான். உண்மையை உணர்ந்தான். தன்னையே வெட்சித்தான். அதுவரையில் அவன் மாயையில் அகப்பட்டு இருந்தமை அவனுக்குத்தான் தெரியும். பின்பே புத்தமதத்துறவியிடம் விளக்கம் கேட்டு தெளிவடைந்தான்.

"அரசை நம்பி புருசனை கைவிடாதே" என்ற ஒன்றைக் கேள்விப்பட்டிருப்போம். பிள்ளை வேண்டும் என்று அரசமரத்தையே நம்பி தினமும் பூஜித்து சுற்றி வந்தால் பிள்ளை கிடைக்காது. அரசமரம் பிள்ளை தராது. அரசமரத்திலிருந்து 99 வகையான வாயுக்கள் வெளிவருகின்றனவாம். அந்த வாயுக்களில் சில சுவாசிக்கும் போது கரு உற்பத்தியாவதற்குரிய உடல்நிலையைப் தருகின்றது. ஆனால் கரு உண்டாகாது. அதனாலே அரசை மட்டும் நம்பி விடாதே என்று கூறப்பட்டது. பௌத்தர்கள் அரசமரத்தையும் நம்புகிறார்கள் அதனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் சனத்தொகைப் பெருக்கம் அதிகம் எனலாம். இவ்விடயத்தில் கூற வந்த கருத்து யாதெனில் நீ மாயையில் அகப்பட்டிருக்கிறாய் என்றால் அது அறியாமை. அறிவு தான் தெளிவு, உண்மை, நிஜம் இதனாலே மந்திரங்களில் சிறந்த காயத்திரி மந்திரம் ஜெபிக்கப்படுகிறது. இம்மந்திரம் அறிவுதான் வேண்டும், புத்தி பிரகாசிக்கவேண்டும் என்றே வேண்டப்படும். ஒளி இருக்குமிடத்தில் இருள் அகலும்.

சைவர்கள் நெற்றியில் திருநீறு பூசுவது இந்த உடல் அழிவது நிஜம். அதனால் இவ்வுடலால் ஆற்றும் பணி யாவும் இறைவா உனக்கே அர்ப்பணம் என நினைத்து விட்டே காரியத்தைத் தொடங்குகிறார்கள். இது மாயைக்குட்படாது தன்னை மறக்காது நினைவுபடுத்தவே.

மாயை என்பது உனக்குள்ளே இருக்கிறது. அது உன்னையே அழிக்கிறது. அதனை மற்றவர் அழிக்கமுடியாது. அதனை நீயே அழிக்க வேண்டும். மாயை அழிந்தால் அடுத்து என்ன என்பது மாயை அழித்தவர்க்கே புரியும்.

## 39. கவலை

நெருப்பைக் காட்டிலும் கவலை ஆபத்தானது. எப்படியெனில் நெருப்பு உயிர் பிரிந்த உடலைத்தான் எரிக்கிறது. ஆனால் கவலை உயிரோடு கூடிய உடலையே எரிக்கும்.

வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல் தோறும் வேதனையிருக்கும்.

**- கண்ணதாசன் -**

சோதனை மேல் சோதனை போதுமடா சாமி
வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி.

**- கண்ணதாசன் -**

உன்னை நீ அறியும் வரை வேதனை இருக்கத்தான் செய்யும்.
இந்த உலகமும் துன்பமாகத்தான் தெரியும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு!
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு!

**- கீதாசாரம் -**

நீ யார் என்பதை புரிந்தால் இந்த உலகத்தில் துன்பத்தை காணமாட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 40. பாபம்

பாபம் என்ற ஒன்று இல்லை.

மக்கள் எல்லோரும் தம் பாபங்கள் போக்குவற்காகக் கங்கையில் நீராடிக் கொண்டிருந்தனர். இவர்களுடைய பாபம் போய் விட்டதை அறிய சிவனும் உமையும் பூமிக்கு எழுந்தருளி மனித உருவத்தில் கணவனும் மனைவியுமாகக் கங்கைக்கரைக்கு வந்தனர். சிவன் கங்கையில் இறங்கி நீராடிக் கொண்டிருக்கும் போது மூழ்கி விட்டார். அப்போது உமாதேவி கணவரைக் காப்பாற்றுங்கள் என்று கதறினாள். எல்லோரும் காப்பாற்ற வந்தபோது உமாதேவி பாபம் செய்யாதவன் தான் என் கணவரைக் காப்பாற்ற வேண்டும் என்றாள். இவர்கள் ஒருவரும் அவரைக் காப்பாற்ற முன்வரவில்லை. அங்கே இருந்து ஒருவன் ஓடிவந்து கங்கையில் குதித்து அவரைக் காப்பாற்றினான். அப்போது உமாதேவி அவனைக் கேட்டார் நீ பாபம் செய்யாதவனா என்றார். அதற்கு அவன் நான் இந்தக் கங்கையில் குதிக்கும் போதே என் பாபங்கள் தீர்ந்து விட்டன. அதன் பின்பே நான் உங்கள் கணவரைக் காப்பாற்றினேன் என்றார்.

**- சன்முகநாதனின் உரையிலிருந்து -**

பாபம் என்றது நீயே உன் மனதில் ஏற்படுத்திக் கொண்டது. அதனை நீயே நீக்கிக்கொள்ளவேண்டும்.

நீ இந்த உலகத்தில் எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் அவை இவ்வுலகில் உள்ள சட்டதிட்டங்களுக்கு மாறாக இருந்தால் அது பாபம் என நீயே நினைத்து நீயே வருந்துகிறாய். இதனாலே நீ நல்லவை செய்தால் உன் மனம் அவ்வாறு துன்பப்படாது.

மனமறிந்து ஏதாவது சட்டதிட்டங்களுக்கு மாறாக நீ செயற்பட்டால் அது உன் மனதிற்குத் தெரிவதால் பாபம் என்கிறாய். ஆனால் நீ அறியாமல் செய்வதெல்லாம் உன் மனதிற்குத் தெரிவதில்லை. அதனாலே நீ பாபம் செய்யவில்லை என நினைக்கிறாய்.

ஆகவே பாபம் என்பது நீயே உனக்கு ஏற்படுத்திக்கொள்வதுதான். இறைவன் இது பாபம் இது பாபமில்லை எனக்கூறவில்லை.

ஒரு உயிரைக் கொல்வது ஒருவருக்குப் பாபமாகத் தெரியும். ஆனால் மற்றவருக்கு அது நன்மையாகத் தெரியும்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்

நீ இப்போது எது வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் நான் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தேன் என நினைக்கக்கூடாது. அவ்வாறு நினைக்காமல் இறைவனுக்காகவே இதைச் செய்தேன் என நினைத்தால் இன்பம் உனக்குண்டு.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே
பாபம் உனக்கில்லை.

## 41. கடவுள்

பூச்சியத்திற்குள்ளே ஒரு இராட்சியத்தை ஆண்டுகொண்டு
புரியாமலே இருப்பான் ஒருவன் அவனைப் புரிந்துகொண்டால்
அவன் தான் இறைவன்

– வானொலியிலிருந்து –

மனிதமனம் எதைச் சிந்தித்து உறுதியாக நடக்கிறதோ
அதை உறுதியாக அடைந்தே தீரும்

– நெப்போலியன் –

நீ தனிமையில் இருக்கும் போது
நீ தனிமையாய் இல்லை ஏனெனில்
உன்னோடு இறைவன் இருக்கிறான்
நீ தான் தனிமை என நினைக்கிறாய்.
உன் ஒவ்வொரு அணுவிலும் இறைவன் இருக்கிறான்
இறைவன் உன்னோடு இருப்பதால்
எல்லாம் உன்னோடு தான் இருக்கின்றன.

நீ உன் கடவுளுடன் இருக்க விரும்பு
நீ உன் தாயுடன் இருக்க விரும்பு
நீ உன் காதலியுடன் (காதலனுடன்) இருக்க விரும்பு
நீ உன் கணவனுடன் (மனைவியுடன்) இருக்க விரும்பு
நீ உன் குழந்தையுடன் (பிள்ளையுடன்) இருக்க விரும்பு

இவை அனைத்தும் உன்னுடன் இருக்க விரும்பு
இவை அனைத்தும் உன் பிள்ளைகளிடம் இருக்க விரும்பு
இவற்றை நீ விரும்பினால்
இறைவனை நீ விரும்பியவன் ஆகிறாய்.
இறைவன் உன்னை விரும்பியவன் ஆகிறான்.

உன் எதிரில் இறைவன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும் எனக்கேட்டால் நீ கேட்கும் வரம்

இறைவா நான் உன்னோடு இருக்கிற வரத்தைத் தா அல்லது உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைக்கிற வரத்தைத் தா எனக் கேட்பதே நல்லது. ஏனெனில் நீ வேறு எதைக் கேட்டாலும் நீ இறைவனைப் புரிந்து கொள்ளாமல் கேட்பதாகவே இருக்கும். அதனால் இறைவன் உனக்குத் துன்பத்தையே தருவார். ஏனெனில் துன்பம் மூலமாகவே நீ மேலான என்னை அறிந்துகொள்ள வேண்டும். ஏனையவற்றைக் கைவிட வேண்டும். என்னையே சரணடைய வேண்டும். இதுவே வாழ்க்கையின் உண்மை நிலை.

கண்ணனிடம் ஒருநாள் துரியோதனனும், அர்ச்சுனனும் சென்றிருந்தனர். அப்போது கண்ணன் இருவரையும் பார்த்து உங்களுக்கு என்னிடமிருந்து தரக்கூடியதாக என் ஆயுதங்கள் ஒருவருக்கும், என்னையே ஒருவருக்கும் தரக்கூடியதாக இருக்கிறது. விரும்பியதை நீங்களே தீர்மானியுங்கள் என்றார். துரியோதனன் ஆயுதங்களைக் கேட்டான். ஆனால் அர்ச்சுனனோ கண்ணா நீ என்னுடன் இருந்தால் போதும். நான் எல்லாம் பெற்றவனாகிறேன் என்றான்.

**- மகாபாரதத்திலிருந்து -**

**கடவுள் இருக்கிறாரோ இல்லையோ நாம் கடவுளை வணங்குவதும் அவரிடம் வேண்டுவதும் உலகப்பொருட்களுக்காக இருக்கக்கூடாது. இறைவனை அடைவதற்கான வழியையும், பேரறிவையும் வேண்டியே வழிபடவேண்டும்.**

**கடவுளிடம் நீ கேட்பது கிடைக்கின்றது எனின் நீ சந்தோசப்படுவாய். அந்தக் கடவுளோடு நீ சென்றாயானால் நீ பேரின்பமல்லோ பெறுவாய். இதை நீ உணர்ந்து கொண்டால்**

**"நீ இங்கிருக்க விரும்பாய்"**

**என்னிடமே வந்து என்னை விரும்பாமல் என்னை விடக்கீழான கேவலமான பொருட்களை நீ கேட்கிறாய் என்றால் உன் அறியாமை எப்படிப்பட்டது. நான் உனக்குத் தந்தாலும் என்ன, தராமல் விட்டாலும் என்ன நீ உன்னை அறியவில்லை. நீ உண்மையை அறியவில்லை. நீ என்னை உணரவில்லை.**

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
ஏனெனில் நீ உன்னை உணர்வதற்காக
நீ உண்மையை உணர்வதற்காக
இவற்றை உணர்ந்தவன்
உலகில் இருக்கவேண்டிய அவசியமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனை அடைவது தான் பாக்கி
இறைவனைவிட ஒருவன் மேலாக அடையப்போவதில்லை

**- பகவத்கீதையிலிருந்து -**

## 42. இருக்கும் இடம்

"இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே"

**- வானொலியிலிருந்து -**

குரு, குரு என்ற நிலையில் இருக்கவேண்டும்
நட்பு, நட்பு என்ற நிலையில் இருக்கவேண்டும்
காதல், காதல் என்ற நிலையில் இருக்கவேண்டும்
அன்பு, அன்பு என்ற நிலையில் இருக்கவேண்டும்
துறவு, துறவு என்ற நிலையில் இருக்கவேண்டும்

இவ்வாறு அந்தந்த நிலையில் இருக்கவேண்டும்
சுயநலத்திற்காக மாறக்கூடாது

உரிய இடத்தில் இருந்துகொண்டால்
உலகம் உன்னை மதிக்கும்
அந்த இடத்தை விட்டு இறங்கி வந்தால்
உன் நிழலும் கூட மிதிக்கும்

**- வானொலியிலிருந்து -**

அது தாங்க உங்கட மனச்சாட்சியே. உங்களை மிதிக்கும். அதனால் சுயநலம் வேண்டாம். கடவுளுக்காகக் கடமையைச் செய். கடைசிவரை கடவுளை நினை. உலகமெங்கும் இன்பமுண்டு. உனக்குள்ளே இன்பமுண்டு.

நீ இருக்கும் இடம் சாக்கடையானாலும்
உன் மனம் பூக்கடையாக இருக்கவேண்டும்.

## 43. துறவு

துறந்து விடுங்கள். தியாகம் செய்யுங்கள், விட்டுவிடுங்கள் பூஜ்யத்திற்காக அல்ல. உயர்ந்ததை அடைவதற்காக. ஆனால் இதை யாரால் செய்யமுடியும்? உயர்ந்தது கிடைக்காதவரை உங்களால் முடியாது. நீங்கள் பேசலாம், நீங்கள் போராடலாம், பல காரியங்கள் செய்ய நீங்கள் முயலலாம். ஆனால் உயர்ந்தது கிடைத்ததும் துறவு தானாக வந்து சேரும். கீழானது அப்போது தானாகவே விலகிவிடும்

**- விவேகானந்தர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டவன் படைச்சான்
எங்கிட்ட கொடுத்தான்
அனுபவி ராஜான்னு
அனுப்பி வைச்சான்

**- வானொலியிலிருந்து -**

உலகத்தில் உள்ள இன்பங்களை அனுபவி. அனுபவித்துக் கொண்டிரு. ஆனால் உடனே விடத்தயாராகவும் இரு. அவ்வாறு விட்டு விலத்துவதற்கான பயிற்சியை உன் மனதில் ஏற்படுத்திக்கொள். பழக்கப்படுத்திக் கொள். ஒன்றிலும் நிலைக்க விடாதே.

"தாமரையிலையில் நீர் போல்" உலகத்தோடு ஒட்டி உறவாடி இரு. ஆனால் ஒட்டாதே. அது தான் "துறவு"

## 44. மனத்திருப்தி

எமது துன்பத்திற்குக் காரணமாய் அமைவது ஆசையும், பற்றும்தான். எவ்வளவு சம்பாதித்தாலும் மனம் திருப்தியடையாது. ஆசைகளுக்கு அளவில்லை. பழைய ஆசைகள் தீர்ந்த பின்பு புதிய ஆசைகளைத் தேடி மனம் அலையும். ஆகையால் மனத்திருப்தி அடைவதே மகிழ்ச்சிக்கு வழி. மனத்தைச் செம்மைப்படுத்துவதே அமைதியைத் தேடிக்கொள்ளும் வழி. மனப்பக்குவம் அடைந்தவர்களுக்கு ஆசைகளை அடக்கவும் தெரியும். ஆசைகளால் பிரச்சனைகளை உருவாக்காமல் வாழும் வழியையும் அறிவார்கள். ஆகவே ஒரு நல்ல வாழ்க்கையின் அடிப்படை அடக்கமாக மனதில் தான் இருக்கிறது. மனதை இப்படி அடக்கிய பிறகு அதைத் தூய்மைப்படுத்த முயல வேண்டும். தூய்மையான மனதில் தான் சிந்தனை தெளிவாக இருக்கும்.

அதிகமான பொருட்களைத் தேடிப்போவதால் வாழ்க்கைத்தரம் உயர்ந்து விடாது. உண்மையில் வாழ்க்கைத்தரம் என்பது வெளி வஸ்துக்களின் பெருக்கத்தில் இல்லை. தரமான வாழ்க்கை மனநிறைவோடு இருப்பது தான். நிறைவு மனசில் தான் இருக்கிறது என்று உணர்ந்து அவரவரும் நம் கடமையைச் செய்து கொண்டு எளிமையாக இருக்கவேண்டும். வசதிகள் உள்ளவர்களும் எளிய வாழ்க்கை நடத்துவது அவர்களுக்கும் நல்லது. மற்ற ஜன சமூகத்திற்கும் நல்லது.

தனக்கென்று பொருள் சேர்ப்பதில் அலங்காரம் செய்துகொள்வதில் தற்காலிக இன்பம் கிடைக்கலாமே தவிர உள்ளம் நிறைவு பெறுவதில்லை. மனத்திருப்தி, மனநிம்மதி யாவும் உன் மனதில் தான் இருக்கிறது. இருக்கிறதைக் கொண்டு திருப்தியாய் வாழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 45. அமைதி

நமது உள்ளம் நங்கூரம் பாய்ச்சிய கப்பல் போல அமைதியாய் இருக்கவேண்டும்.

ஊமை என்றால் அதிலொரு அமைதி
ஞானம் என்றால் அதிலொரு அமைதி
தனிமை என்றால் அதிலொரு அமைதி
இரவு என்றால் அதிலொரு அமைதி

ஆறு அமைதியாக ஓடும் இடங்களில் ஆழம் நிறைந்திருக்கும். மௌனமாக செயற்படுபவர்களிடம் நிறைய ஞானம் இருக்கும்.

# 46. தியானம்

நீ ஜெபம் பண்ணும் போது உன் அறை வீட்டிற்குள் பிரவேசித்து உன் அறைக்கதவைப் பூட்டி அந்தரங்கத்தில் இருக்கின்ற பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்த்த உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பயனளிப்பார்.

பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று அவர் அறிந்திருக்கிறார்.

ஜெபம் பண்ணும் போது அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலம்பாதேயுங்கள். அவர்கள் அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள்.

**– பைபிள் – (புதிய ஏற்பாடு 6, 5 ஆம் வசனம் தொடக்கம் 13 வரை)**

மனதில் எந்தவிதமான எண்ணமோ எழுச்சியோ தோன்றாதவாறு மனம் அடங்கிய நிலையில் மௌனமாய்ச் சும்மா இருப்பதுவே உயர்ந்த தியானம்.

நித்திரை செய்தால் மனம் நித்திரையை நாடும். யாத்திரை செய்து பழகினால் அதையே நாடும். உலகிலுள்ள அத்தனையிலும் தொடர்ந்து பழகினால் அதிலதில் இழுக்கும். ஆகையால் ஒன்றிலும் நிலைக்க விடாதே. இறைவனையே மனதில் நினைத்திரு. 8238 c c

**– யோகர் சுவாமி –**

இயற்கையாக அமைதியாக உள்நோக்கியபடி வாழுங்கள். நீங்கள் நீங்களாக தனியா, அமைதியாக உங்கள் மன ஓட்டத்தைக் கவனித்தவாறு சிறிது நேரம் தினசரி இருக்கமுயற்சி செய்யுங்கள். கொஞ்சம் கொஞ்சமாய் உங்கள் எண்ண அலைகள் குறைய ஆரம்பிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் உங்கள் மனம் அமைதியாகி எண்ணம் அனைத்தும் நின்றுவிடும். அந்த அமைதியில் நிசப்தத்தில் மனம் காணாமல் போய்விடும். அப்பொழுது நீங்கள் அங்கே இருக்கமாட்டீர்கள். அதுவரை நீங்கள் என்று கருதி வந்தது உங்கள் மனதைத் தான் என்பதை நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள்.

இந்த அமைதியான நிலையில் வாழ்வின் ஒரு புதிய பரிமாணத்தை உணர்வீர்கள். இந்த நிலையில் உங்களிடம் எந்த பேராசையோ எந்த பாலுணர்வோ, கோபமோ, எதிர்ப்போ எதுவும் இருக்காது.

– ஓஷோ –

ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தம் என்று ஏங்குகின்றோம். ஆனந்தம் எங்கே கிடைக்கிறது. உலக சம்பந்தமான பொருட்களில் மகிழ்ச்சி கிடைப்பதில்லை. புலன் இன்பங்களிலும் மகிழ்ச்சி இல்லை. தனி மனிதனிடமும் மகிழ்ச்சி இல்லை.

கஷ்டம், நஷ்டம், இன்பம், துன்பம், பிரச்சனை இவற்றால் பாதிக்கப்பட்டு இவற்றை எதிர்த்து சமாளிக்கும் போதுதான் இறை உணர்விலுள்ள ஆனந்தம் உனக்குப் புலப்படும்.

இறைவனை நோக்கிப் பிரார்த்தனை செய். அவரிடம் யார் எதை விரும்புகிறார்களோ அதை வெறுக்கிறார்கள். எப்போதும் மனதை ஒருமுகப்படுத்தி இறைவனைத் தியானிப்பவன் எந்தச் சூழ்நிலையிலும் எங்கே இருந்தாலும் இறைவனின் சந்நிதியில் இருப்பவன் ஆகிறான்.

சரீர சந்தோசத்திற்காக எதை வேண்டுமானாலும் செய்வது, எதை வேண்டுமானாலும் கேட்பது, பேசுவது, எதை வேண்டுமானாலும் உண்பது என்றில்லாமல் இவற்றையெல்லாம் ஒரு கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வருவதே புலனடக்கம்.

– காஞ்சிப்பெரியவர் –

நீரைக் கலக்கு கலக்கு என்று கலக்கிக்கொண்டிருந்தால் அதற்குள்ளே இருக்கும் முத்து எப்படித் தெரியும். நாம் அநேக எண்ணங்களால் மனசைக் கலக்கிக் கொண்டிருப்பதனால் தான் உள்ளே இருக்கிற ஆன்மா என்ற முத்து தெரியவில்லை. எண்ண அலைகளை எல்லாம் நிறுத்திவிடுவது தான் நிஜ மௌனம் அதனை அடைவதற்கு வாய் மௌனம் முதலில் தேவை. முழு நிலவின் விம்பம் ஏரியில் விழுகிறது. ஆனால் மேற்பரப்பு கொந்தளிப்பாக இருப்பதால் அந்த விம்பத்தை நாம் தெளிவாகக் காணமுடியவில்லை.

கொந்தளிப்பு அடங்கட்டும். இயற்கை அலை எழுப்பாமல் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள். அமைதியாக இருங்கள் சிறிது நேரம் சென்றால் இயற்கையே உங்களை விட்டுவிடும். நாம் யார் என்பது அப்போது நமக்கு தெரியவரும்.

– சுவாமி விவேகானந்தர் –

நீங்கள் எல்லையற்ற ஆன்மா என்பதை ஒருமுறை நிச்சயம் செய்து கொள்ளுங்கள். அது உண்மையானால் நீங்கள் உடம்பு என்பது பொய். நீங்கள் ஆன்மா தன்னை ஆன்மாவாகப் பார்க்க வேண்டும். இப்போது ஆன்மா தன்னை உடம்பாகப் பார்க்கிறது. அது நிற்க வேண்டும். இந்த அனுபூதி வரத் தெடங்கியவுடனேயே நீங்கள் முத்தர்களாகி விடுவீர்கள்.

– சுவாமி விவேகானந்தர் –

காரணம் என்றால் காரியமும் இல்லை. ஆகவே காரணத்தை ஒழித்துவிட வேண்டும். அறியாமையை அழிந்து விட்டால் சமஸ்காரம் அழிந்துவிடும். சமஸ்காரத்தின் அழிவு தன்னுணர்வை அழித்துவிடும். தன்னுணர்வு அழிந்தால் நாமரூபம் அழிந்து விடும். நாமரூபம் அழிந்துவிட்டால் ஆறறிவு அழிந்து விடும். ஆறறிவு இல்லையென்றால் உணர்ச்சி இருக்காது. உணர்ச்சி அழிந்தால், ஆசையும் அழியும், ஆசை அழியும் போது பற்றுதலும் போய்விடும். பற்றுதல் இல்லையென்றால் எந்த வேதனையும் துக்கமும் இல்லை. பிறப்பும் இல்லை சங்கிலித் தொடர் போன்ற இந்தக்காரணகாரியத்தில் எதையாவது ஒன்றை அறுத்து விட்டால் போதும் அதற்குப் பிறகுள்ள காரியம் எதுவும் தோன்றாது.

– புத்தர் –

## 47. மரணபயம் வேண்டாம் மரணம் உனக்கு வேண்டும்.

மரணம் என்பது புதுவாழ்விற்கு உறுதிமொழி.

ஓர் அறிவு உயிராகிய நிலத்தில் புல்லாகியும், பூண்டாகியும், ஊர்ந்து செல்லும் புழுவாகியும், நிலத்தில் மரமாகியும், பலவகை விலங்குகளாகவும், பறந்து செல்லும் பறவை இனங்களாக, அசுரர்களாக, பாம்பாகவும், கல்லாகியும், மக்களாகியும், பேய்களாக, கணங்களாக, முனிவராய், தேவராய் என பல பிறப்புக்கள் எடுத்து அலுத்தேன் எம் பெருமானே.

– மாணிக்கவாசகர் –

புத்தபிரான் தனது ஞானத்தினால் தான் பிறப்பெடுத்த பிறப்புக்கள் ஐந்நூறு நினைவிருக்கிறது என்று கூறினார்.

நாமோ இப்பிறவியே எது என தெரியாமல் வாழ்கிறோம். இதை உன்னையே நீ கேட்டுப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலி மானை அடித்துச் சாப்பிடும் போது அந்த மானுடைய உயிர் வேதனைப்படுவது தெரிகிறது. சிங்கம் பசுவை அடித்துச் சாப்பிடும் போது அந்த பசுவுடைய உயிர் துடிதுடிப்பது நமக்குத் தெரிகிறது. ஆனால் பசு புல்லைச் சாப்பிடும் போது அந்தப் புல்லுக்குள் உறையும் உயிர் துன்புறுவது நமக்குத் தெரிவதில்லை. மனிதன் காய், கனி, கிழங்குகள் சாப்பிடும் போது அவற்றின் உள்ளே உறையும் உயிர் வேதனைப்படுவது நமக்கு விளங்குவதில்லை.

காரணம் என்ன?

மானின் உடலிலும், பசுவின் உடலிலும் வாழ்கின்ற உயிர்கள் விழிப்போடு இருப்பவை. அதனால் அவை துடிதுடிக்கின்றன. புல்லிலும், நெல்லிலும் உள்ள உயிர்கள் நெடிய பேருறக்கத்தில் மூழ்கிக்கிடப்பவை!

ஒருவனுக்கு மயக்க மருந்தைக் கொடுத்துவிட்டு வைத்தியர் அவனுடலில் அறுவைச் சிகிச்சை செய்கிறார். அப்போது அவர் அவனது குடலை அறுத்தாலும், கை, கால்களை வெட்டி எடுத்தாலும் கூட அவனுக்கு அந்த வேதனை தெரிவதில்லை அல்லவா?

அது போலப் புல்லுக்குள்ளேயும், நெல்லுக்குள்ளேயும் உறங்கிக் கிடக்கும் உயிர்களும் தமக்கு உடலாயுள்ள புல்லைப் பசு தின்றாலும் அது பற்றி உணர்வோ, துடிதுடிப்போ இல்லாமல் சும்மா இருக்கின்றன.

ஓர் உயிரானது ஆணவ மலத்திலிருந்து அறவே விடுபடுவது என்றால் அதற்கு ஒரு பிறவி போதாது. மீண்டும் மீண்டும் பல பிறவிகளைக் கொடுத்துத் தான் இறைவன் அதற்குப் பரிபக்குவத்தை உண்டு பண்ண வேண்டியதயா யிருக்கிறது. அப்படிக் கொடுக்கும் போது ஒவ்வொரு புதிய பிறவியில் உயிர் புகுத்தப்படும் போதும் அதன் பழைய பிறவியைச் சேர்ந்த உடல் அழிக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

உடல்களின் அந்த அழிவானது சில சமயங்களில் விபத்துக்களால் ஏற்படுவதாய் இருக்கலாம், சில சமயங்களில் நோயினால் ஏற்படுவதாய் இருக்கலாம், சில சமயங்களில் புலியால் மான் கொல்லப்படுவதைப் போன்று பகைவர்களால் ஏற்படுவதாய் இருக்கலாம், அல்லது தற்கொலையாலோ, அரசாங்கத்தின் தண்டனையாலோ நேருவதாய் இருக்கலாம். இப்படி ஏதாவது ஒரு விதத்தில் உயிர்களின் உடல்கள் அழிக்கப்படவேண்டும் என்பதுதான் முக்கியமே தவிர அவை எப்படி அழிக்கப்படுகின்றன என்பது முக்கியமல்ல.

உடல்கள் அழிவதனால் இன்று புழுவாக வாழும் ஓர் உயிர் நாளை ஒரு குயிலாகப் பிறந்து கூவிப் பறந்து திரிவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இன்று எலியாக வாழும் ஓர் உயிர் நாளை ஒரு புலியாகப் பிறந்து வனத்திலே கம்பீரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவித் திரிவதற்கான வாய்ப்பு ஏற்படுகிறது. இன்று கழுதையாக வாழும் ஓர் உயிர் நாளை ஒரு காட்டு யானையாகப் பிறந்து தன் கூட்டத்திற்கே தலைவனாகத் திகழ்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்று மனிதனாக வாழும் ஓர் உயிர் நாளை ஓர் இந்திரனாகவோ, அல்லது பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் இவர்களில் ஒருவராகவோ பிறந்து தேவர்களும் வணங்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் உயிர்களது முன்னேற்றத்தின் இரகசியமே அவற்றின் உடல்கள் அழிந்து போவதில்தான் அடங்கி இருக்கிறது. இந்த உண்மையை மட்டும் புரிந்து கொண்டால், உணர்ந்து கொண்டால் அப்புறம் உலகில் எந்த மனிதனாவது மரணத்துக்குப் பயப்படுவானா? மரணம் எப்போது வரப் போகிறது என்றல்லவா அவன் மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பான்.

மரண பயம் இனிமேல்
உனக்கு வேண்டாம்.

## 48. ஆவிகள்

ஆவிகள் என்பதுதான் மனிதனின் வாழ்க்கையைச் சிந்திக்க வைக்கிறது. மனிதன் இறந்தால் அவனது உடலில் இருந்த உயிர் எங்கே போகிறது? அடுத்து அது என்ன செய்கிறது? அது இறந்த உடலின் அருகில் அலைந்து திரிகிறதா? அல்லது வேறு மனிதனின் உடலில் புகுகின்றதா? அது அலைந்து திரிவதற்கு காரணமென்ன? வேறு உடலில் புகுவதற்கு காரணம் பழிவாங்குவதற்காகவா அல்லது தனது ஆசைகளைத் தீர்ப்பதற்காகவா? அவ்வாறு புகுந்தால் ஒரு உடலில் இரண்டு உயிரல்லவா இருக்கும்? இறப்பவர் எல்லோரது உயிரும் ஆவியாகத் திரிகின்றதா? அல்லது அகால மரணம் அடைவோருடைய உயிர்தான் ஆவியாகத் திரிகின்றதா? இவ்வாறு திரியும் ஆவிகளுக்கு மீண்டும் பிறப்பு இல்லையா? இது போன்ற பல்வேறு கேள்விகள் உண்டாகின்றன.

இறந்து விட்டார் என்பது தெரிந்த பின்னர் நாம் அவரின் ஆவி அலைந்து திரியாமல் அது ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று கிரியைகள் செய்கிறோம். ஆனால் காட்டில் சிங்கம், புலி ஒருவனைக் கொன்று தின்றுவிட்டது. அது உறவினர்களுக்கே தெரியாமல் இருக்கும் போதும், உலகில் காணாமல் போய் இருப்பவர்களுக்கும் யார் கிரியைகள் செய்வது. உயிரோடு இருந்தால் கிரியை செய்வது சரியா? அவ்வாறு கிரியை செய்யாவிட்டால் விலங்குகளால் இறந்தவரது ஆவி அலைந்து திரியும் காலத்திற்கு முடிவே இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலோடு இருக்கும் போது உலகத்தில் இருப்பதை அனுபவித்து ஆத்மா சாந்தியடையாதது, உடலை விட்டுப் பிரிந்த பின் அது எதனால் கிரியைகளில் படைக்கும் உணவுகளையோ அல்லது அது ஆசைப்பட்ட துகளையோ அனுபவிக்கும்? நீ படைக்கும் பொருட்களை அது அனுபவிக்கின்றது என்றால் அந்த ஆவிக்கு உலகத்தில் கிடக்கும் பொருட்களை அனுபவிக்கத் தெரியாதா?

ஆவியாக இருந்து அனுபவிக்கின்றது என்றாலோ அதற்கு உடல் என்ற ஒன்று தேவையில்லையே உடல் எடுப்பதற்கும் ஒரு காரணம் உண்டு என்பதை நீ உணர வேண்டும்.

விஞ்ஞான பூர்வமாக கூறுகின்றவர்கள் ஆவியை வாயுக்களே என்கின்றனர். புளியமரத்தில் வெளிவரும் வாயு, வயல் வெளியில் உருவாகும் வாயுவை கொள்ளிவால் பேய்கள் என்று கூறுவதும் மற்றும் வானொலி அலைகள் தொலைக்காட்சி அலைகள் காற்று மண்டலத்தில் கலந்து தொலைக்காட்சியிலோ, வானொலியிலோ நமக்கு தெரியப்படுத்துவது போல, இறந்தவரின் நடமாட்டங்களும், அவருடைய ஒலிகளும் இந்த காற்று மண்டலத்தில் கலந்திருக்கும். அவை நம் கண்ணுக்கோ, காதுக்கோ சில வேளைகளில் உணர முடியும். இவைகளையே ஆவிகள் என்கின்றனர் என கூறுகின்றனர்.

உலகில் உள்ள மனிதனைச் சந்திரமண்டலத்திலே அல்லது வேற்று கிரகத்திலே கொலை செய்து அங்கே ஆவி இருக்கிறது என்று ஆய்வு செய்ய வேண்டிய நிலையும் வரலாம்.

ஆவியும் இருக்கலாம்
ஆண்டவனும் இருக்கலாம் ஆனால்
ஆனந்தம் தான் நமக்குத் தேவை.

## 49. உயிர்

துடிப்பதெல்லாம் உயிரல்ல. இயங்குவதெல்லாம் உயிரல்ல.

பல்லியின் வால், அறணையின் வால், தலை வெட்டுப்பட்ட பாம்பு, துண்டு துண்டாக்கப்பட்ட ஆமை யாவும் துடிக்கின்றன. சிறிது நேரம் செல்ல துடிப்பு நிற்கின்றது. உயிர் சிதறுண்டு பிரிகிறது என்று கூறமுடியாது. உடலில் உள்ள இரத்தத்தின் சூடு ஆறும் வரை அப்பகுதி துடிப்பது இயற்கை.

கோழியின் தலையை அறுத்துவிட்டுக் கீழே விட்டால் அது ஓடித்திரிந்து சிறிது நேரத்திற்குப் பின்பே ஓய்வில் வரும். ஓய்வில் வரும் போது தான் உயிர் போகின்றது என்று கூறமுடியாது. மின்சாரத்தைத் தடுத்து விட்டால் மின்விசிறி உடனே நிற்பதில்லை. இயங்கியபொருள் உடனே நிற்காமல் சிறிது இயங்கியே நிற்கின்றது. அது போலவே இயங்கிய உடல் உடனே நிற்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த உடல் எனக் கூறப்படுகின்ற உடலிலும் உயிர் இருக்கின்றது. எப்படியென்றால் அவ்வுடலில் உள்ள ஒவ்வொரு அணுவிலும் சில அணுக்களில் உயிர் உண்டு முக்கியமான அணுக்கள் செத்து விட்டன. அதுதான் முழு உடல் இயங்க முடியவில்லை. எகிப்தில் உள்ள பிரமிட்டுக்களில் கிடைக்கப்பெற்ற மம்மியின் வயிற்றில் கரு இன்றும் உயிரோடு இருக்கின்றது. மம்மியின் உடலின் சில பாகங்கள் உயிருடன் தான் இருக்கின்றன.

உன் உடலில் இருந்து ஒரு சிறிய தசைத்துண்டு வெட்டி எறியும் போது அத்தசைத்துண்டு பதப்படுத்திப் பாதுகாத்து அதனையே ஒரு பெரிய உருவமாக உன்னைப் போல் உருவாக்கலாம். அது தான் குளோனிங்முறை. நீ எறிந்த தசைத் துண்டு அப்படியே அழிந்து போகும் போது எனக்கு துன்பம் தெரியாது. ஆனால் உன்னைப் போல் உருவாக்கிய உருவம் அழியும் போது உனக்குத் துன்பம் ஏற்படுவது ஏன்?

உன் குழந்தை இறந்தபோது ஏற்படும் துன்பத்தை விட உன் பிள்ளை வளர்ந்து பெரியவனாக, பெரியவளாக இருக்கும் போது இறந்தால் துன்பம் அதிகம். ஏனெனில் நீயும் அவ் உருவத்தோடு இணைந்து இயங்கியதால் உயிர் என்ற ஒன்று உண்டு. அது தான் இவ்வளவு காலமும் இயக்கியது என நீ நம்பிவிட்டாய். ஆனால் சிறிது காலம் செல்ல நீ அந்தத் துன்பத்திலிருந்து விடுபடுகிறாய். அதனை மறக்கிறாய்.

ஆகவே உயிர் என்பது ஒவ்வொரு அணுவிலும் தான் இருக்கிறது. நீ தான் முழு உடலில் ஏதோ ஒரு உருவத்தில் இருக்கிறது என நீயே கற்பனை உருவம் கொடுத்து கற்பிதம் செய்கிறாய். இது உன் மனதிலிருந்து விடுபட்டால் இன்பம் எப்போதும் உனக்குண்டு.

## 50. உடல்

ஒரு அணு உணவு சேர்க்கப்பட்டு பல அணுக்களாக உருவாக தோற்றம் பெற்றதே உடல்.

உடலானது இரத்தம், எலும்பு, தசை, கொழுப்பு என்பவை சேர்ந்து இருப்பது உனக்குத் தெரியும். ஆனால் நீ உண்ட உணவில் உள்ள கல்சியம் எலும்பாகவும், அருந்திய நீர் மற்றும் இரும்புச்சத்துக்கள் இரத்தமாகவும், மாச்சத்து தசையாகவும், கொழுப்புச்சத்து கொழுப்பாகவும் மாற்றமடைந்து உருவமாக இருக்கின்றது என்பது உனக்குப் புரிய வேண்டும். இது அழிந்து மீண்டும் உணவுகளாக மாறுவதில் எந்தவித தவறும் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டாவது இரண்டாலதான்
ஊர் போவது நாலாலதான்
கருவோடு வந்தது
தெருவோடு போவது
மெய்யென்று மேனியை
யார் சொன்னது

– வானொலியிலிருந்து –

நீ உண்கின்ற உணவு சரியாக, சத்தாக, தூய்மையாக இருக்குமாயின் நீ இறப்பதற்கு வாய்ப்பில்லை. நீ தொடர்ந்து உயிரோடு உடலோடு இருக்கலாம்.

வீடு வரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ!

– வானொலியிலிருந்து –

ஆனால் கடவுள் தந்த அழகிய வாழ்வு
உலகம் முழுவதும் அவனது வீடு
கண்கள் மூடி வாழ்த்துப்பாடு.
எது வரை வாழ்க்கை அழைக்கிறதோ
அது வரை நாமும் சென்றிடுவோம்
பிரிந்திடும் நேரம் வரும்போதும்
சிரிப்புடன் நன்றி சொல்லிடுவோம்.

– வானொலியிலிருந்து –

அதுவரை
"துன்பத்திலும் இன்பமாய்
சோகத்திலும் சுகமாய்
பிரிவிலும் நினைவாய்......."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுப்புரை

அறிவு, அவரவர்க்கும் இருக்க வேண்டியது.
குழந்தை, முற்பிறப்பில் பாபம் செய்தது.
தாய், தெய்வமாக இருக்க வேண்டியவள்.
தந்தை, அறிவின் உச்சமாய் இருக்கவேண்டியவர்.
பிள்ளை, உண்மையை உணர வேண்டியது.
அறிந்தவை பல அவற்றில் சில, வழிகளைத் தேட வேண்டியது.
சுயபுத்தி, அனைவருக்கும் இருப்பது.
கடமை, அர்த்தத்தைப் புரிய வேண்டியது
கல்வி, முடிவில்லாதது.
மாணவர்கள், திருந்த வேண்டியவர்கள்.
நட்பு, சிறந்த உறவு.
சாதி, நீறு பூத்த நெருப்புப் போல் இருப்பது, தணிய வேண்டியது.
மதம், தேவையில்லாதது.
பணம், பக்குவமாகக் கையாளவேண்டியது.
அன்பு, அனைவரிடமும் அவசியம் இருக்கவேண்டியது.
காதல், காதலர்களுக்கிடையிலான ரகசிய மொழி.
திருமணம், அவரவர் முடிவு எடுக்கவேண்டியது.
சீதனம், அவரவர் குணத்தை உணர்த்துவது.
கணவன், தெய்வமாக மாற வேண்டியவன்.
மனைவி, மனைவியாக இருக்க வேண்டியவள்.
குரு, மனதால் போற்றப்பட வேண்டியவர்.
மனதால் வாழ்வதுதான் வாழ்க்கை, மனம் இருக்கும் வரைதான் வாழ்க்கை
திருந்து திருத்து, முதலில் உன்னை.
நீ உனக்காக வாழ், பிறருக்காக வாழாதே.
உறவுகள், ஒட்டாமல் இருக்க வேண்டியது.
உதவுவதில் இன்பமுண்டு, உதவிப் பார்க்க வேண்டியது.
அநாதைகளின் வாழ்வு, ஆதரவு கொடுக்கப்பட வேண்டியவர்கள்.
விதவை, மதிக்கப்பட வேண்டியவள்.
ஊனம், மனதில் இருக்கக் கூடாது.
மனநோயாளி, சமூகத்தில் உருவாகிறவர்கள்.
குற்றவாளி, கண்டு பிடிக்கமுடியாதவர்கள்.
அழகு, அழியாதவை அமைதி தருவது.
குணம், மாற்றக் கூடியது.
பயனுள்ள வாழ்க்கை, இப்பொழுதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மீகம், ஆண்டவனுடனான தொடர்பு.
நான், முதலில் சாகவேண்டும்.
நிலையாமை, உலகின் நியதி.
இதுதான் மாயை, தெரிந்தும் தெரியாதது போல் இருப்பது.
கவலை, வெளியே காட்டிக் கொள்வது.
பாபம், மனதிலே இருப்பது நீயே போக்க வேண்டியது.
கடவுள், நீயே உணர வேண்டியது.
இருக்குமிடம், ஞாபகம் இருக்கவேண்டியது.
துறவு, குழந்தைக்கும் இருக்க வேண்டியது.
மனத்திருப்தி, மனதின் குறிக்கோள்.
அமைதி, மனதில் இருக்கவேண்டியது.
தியானம், உன்னையே நீ நினைப்பது.
மரணபயம் வேணாம் மரணம் உனக்கு வேணும், ஆனந்தம் வர.
ஆவிகள், அறிய வேண்டிய அவசியமில்லாதவை.
உயிர், ஒவ்வொரு அணுவிலும் இருப்பது.
உடல், அதிசயமானது.

படிப்பிக்கிறவர்களை "ரீச்சர்" என்று ஆங்கிலத்தில் சொல்லவேண்டும் என்கின்ற ஆசிரியர், மாணவர், படிப்பிக்கிற ஆணைப் பார்த்து "ரீச்சர்" என்று சொல்லும் போது ஏற்றுக் கொள்ளத் தயங்குகின்றார் என்றால் எங்கே தவறு இருக்கிறது.

சிறு வயதிலிருந்து நல்லதுகளை நீ அறிய வேண்டும், நல்லதையே செய்யவேண்டும், நல்லதையே கடைப்பிடிக்க வேண்டும் என்றுதான் கல்வி கற்க பிள்ளையை பெற்றோர் பாதுகாவலர் பாடசாலைக்கு அனுப்புகின்றனர். பாடசாலையில் தப்புக்களைச் சொல்லிக் கொடுப்பதில்லை. ஆசிரியர்கள் "சாதிகள் இல்லையடி பாப்பா, உயர் தாழ்வு இகழ்ச்சி கொள்வது பாவம்" என்று மாணவனுக்குச் சொல்லிக் கொடுத்தால் அதனைப் பெற்றோரோ, பாதுகாவலரோ மறுக்கின்றனர் என்றால் மாணவன் குருசொல் கேட்பதா?, தாய் தந்தை சொல் கேட்பதா? என்ற தடுமாற்றம் உருவாகின்றது என்றால் எங்கே தவறு இருக்கிறது.

தவறு உனக்குள்ளேதான் இருக்கிறது.
வாழ்க்கை என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என்றில்லை
வாழ்க்கை என்றால் எப்படியும் வாழலாம் என்றில்லை.

உன்னை உணர்தலே வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

திருவள்ளுவரின் 1330 குறளும் தெரிந்து

கற்க கசடு அறக் கற்றவை

கற்றபின் நிற்க அதற்குத் தக. படிப்பதைப் பிழையின்றிப் படித்து அதன் படி நட. இக்குறளின் படி நீ வாழவில்லையெனில் அது வாழ்க்கையில்லை.

படித்ததன்படி வாழ்வதும் வாழ்க்கை. வாழ்ந்து பார்த்துப் படித்துக் கொள்வதும் வாழ்க்கை.

எங்கும் கெட்டது என்ற ஒன்றும் இல்லை. எல்லாம் நல்லதுதான். நீ தான் ஏற்றுக் கொள்கிறாயில்லை.

உணவுக்காக விலங்குகளைக் கொல்லு, போர் புரியும் போது எதிரியைக் கொல்லு, பொய் சொல்ல வேண்டிய இடத்தில் பொய் சொல்லு, களவு எடுக்க வேண்டிய இடத்தில் களவு எடு, காமமாய் இருக்க வேண்டிய இடத்தில் காமமாய் இரு, இடங்களுக்கு ஏற்பவும், காலங்களுக்கு ஏற்பவும் நீ நடந்து கொள். அதுதான் சமயம் அறிந்து நடந்து கொள் அதுவே "சமயம்"

ஆனால் நீ பல காலம் வாழலாம் என்றோ, வசதியாய் இருக்கலாம் என்றோ இவற்றைச் செய்யாதே.

நீ பலகாலம் வாழலாம் என்றோ, அடுத்த பிறப்பில் நல்லாயிருக்கலாம் என்றோ தானதர்மங்கள் செய்யாதே. நீ உன் மனதில் இங்கிருக்க விரும்பாமல் இரு.

"எங்கிருந்து தானாக வந்தாயோ அங்கேயே தானாக சென்றுவிடுவாய்"

மாணவர்களுக்கு வேதம் சொல்லிக் கொடுத்த ஆசானை மதித்தார்கள். காமசூத்திரம் சொல்லிக் கொடுத்த ஆசானை மதித்தார்கள். ஆசானுக்கு "மதி" இருக்கு நீ அவரை மதி என்று கூறினார்கள் ஏன்? அவர்களுக்கு மதி இருந்தது. அந்த மதி "புத்திமதி" அப்போது ஆசானுக்கு இருந்தது இப்போது இல்லையே.

"ஏகம் சத்" வேதகாலத்தில் சொன்ன கூற்று இதுதான். "உள்ளது ஒன்று" வேறு ஒன்றும் கூறவில்லை, இதனையே உபநிடதத்தில் உள்ளது ஒன்றுதான் அதுவே பலவாகத் தெரிகிறது. ஆகவே நீயும், நானும், அவனும் ஒன்று என்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னதோடு சிலந்தி தன் வாயால் வலையைப் பின்னிவிட்டு அதிலே இருக்கிறது போல கடவுளும் இந்த உலகத்தைப் படைத்துவிட்டு அதிலே மறைந்து இருக்கிறார் என்றும் கூறினார்கள். நீ அதை விளங்காமல் எல்லாம் ஒன்றுதானே எதுவும் செய்யலாம் என்று திரும்பிப் பார்த்து விட்டாய். உண்மையும் இது தான். என் படைப்பின் சாராம்சமும் இதுதான் மீண்டும் சொல்கிறேன்.

கல்வி கல்வி என்று சொல்லி கல்வியே துன்பம் என்கின்ற அளவிற்கு உலகை நீங்களே துன்பமாக்கிக் கொண்டிருக்க விடமாட்டேன்.

கல்வி கல்வி என்று சொல்லி கடையில் ஏலம் போட்டு விற்கிறாய். கல்வியையும், கலவியையும் படித்துவிட்டு திருமணத்திற்கு சீதனம் கேட்கிறாய் என்றால் உனக்கெல்லாம் திருமணம் தேவையோ "மூஞ்சூறு தான் போக தெம்பில்லாமல் விளக்குமாறையும் கொண்டு போகலாமோ" சீதனம் கேட்கிறவனெல்லாம் சீர் கெட்டுப் போகிறான்.

சீதனம் கேட்டு வாங்குகிறாய் சீதனம் இல்லாதவர்கள் ஏங்குகிறார்கள். கிருஷ்ணனின் படைப்பும் இதுவோ என்று என் படைப்பின் அர்த்தமே லீலைதான்.



8238cc

KOHA JPL



றூபன் பிறிண்டேர்ஸ். முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூபன் பிறிண்டேர்ஸ்.
முருகமூர்த்தி கோவில் வீதி. நவாலி கிழக்கு. T.P 0776 624386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org